# இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 383
சனி, 21 மார்ச், 2026 |
பக்கங்கள் 16
www.ilakku.org




# இந்தோ–பசுபிக் சதுரங்கத்தில் இலங்கை ‘அமெரிக்க அழுத்தங்களும் ஈரானியத் தத்தளிப்பும்’

விதுரன்



அன்னை பூபதி
அவர்களின் 38ஆவது நிறைவாண்டின்
நினைவுகளுடன் ...

## திருகோணமலை துறைமுகமும், திருத்தப்படாத எண்ணெய்க்குதங்களும்

## ஈரான் யுத்தம் சொல்லும் செய்தி..!



பா.அரியநேத்திரன்



# அமெரிக்க வான்படையின் நவீன விமானம் வீழ்ந்தது எப்படி?

வேல்ஸில் இருந்து அருஸ்

# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு பணிகள் மீண்டும்!



செம்மணி மனிதப் புதைகுழியின் அடுத்தகட்ட அகழ்வு பணிகள் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான பிரச்சினை எழுப்பப்பட்டது. சர்வதேச ரீதியாகவும் ஐக்கிய நாடுகள் சபையிலும் நாம் உறுதியளித்த போதிலும், மனிதப் புதைகுழி விசாரணைகளை நாம் முன்னெடுக்கவில்லை என நீதி அமைச்சரின் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறைகளை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கும் அரசியல் இயக்கம் நாங்கள். உண்மையில் செய்த விடயங்களைப் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை, ஆனால் செய்தவற்றைத் தெரிந்துகொண்டே விமர்சனம் செய்வதுதான் தவறானது.

1999ஆம் ஆண்டில் தான் இந்தப் புதைகுழியிலிருந்து எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. அன்றிலிருந்து 2024 வரை 25 வருடங்கள் கடந்துவிட்டன. அந்த 25 வருட காலப்பகுதியிலும் செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து 15 எலும்புக்கூடுகளே கண்டெடுக்கப்பட்டன.

2015 முதல் 2019 வரையான அரசாங்கத்தின் கீழ், தமிழ் அரசுக்கட்சி மற்றும் அதன் தலைவர்களான சுமந்திரன் போன்றோர் எதிர்க்கட்சியில் இருந்த போதும், ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் அவர்களுக்கு விசேட செல்வாக்கு இருந்தது.

அவர்களுக்கு அமைச்சர்களை விடவும் அதிக அதிகாரம் இருந்தது. அப்பகுதியின் பணிகளுக்காகப் பெருமளவு நிதியும் வழங்கப்பட்டது. அதில் நாம் தவறு காணவில்லை. ஆனால், அந்த ஐந்து ஆண்டுகளில்

தொடர்ச்சி: பக்கம் 15

## தமிழக அகதிகளைத் தழுவிக் கொள்ளத் தயார்: இந்தியாவுக்கு அநுர அரசு தெரிவிப்பு



உள்நாட்டுப் போர் காரணமாகத் தமிழகத்திற்குச் சென்று அகதிகளாக வசிக்கும் இலங்கைத் தமிழர்களை மீண்டும் தாய்நாட்டிற்கு வரவேற்கவும், அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்கவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் முழுத் தயார் நிலையில் உள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்யேக நேர்காணலின் போதே அவர் இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

“இந்திய மற்றும் தமிழ்நாடு அரசியல்வாதிகளிடம் நான் ஒரு தாழ்மையான வேண்டுகோளை முன்வைக்கிறேன். தயவுசெய்து தேர்தல்களை மையப்படுத்திய அரசியல் பிரச்சாரங்களுக்கு அகதிகளை ஒரு கருவியாகப் பயன்படுத்தாதீர்கள்.

தொடர்ச்சி: பக்கம் 7

## காணாமல் போனவர்களுக்காக புதிய சட்டங்களைக் கொண்டுவர அரசாங்கம் தயார் - அமைச்சர் ஹர்ஷன!



“யுத்தத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் அவர்களின்குடும்பங்களுக்குநீதி அவசியமாகும். அந்த நீதியை துரிதமாக பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தேவையான நடவடிக்கை எடுக்கும். இதன்போது புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டிய தேவை எழுமாக இருந்தால் அதனை கொண்டுவரவும் அரசாங்கம் தயாராக உள்ளது” என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (20) நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் எம்.பி.எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிக்ஸ், நேட்டோ, ஜி7 கூட்டணிகளை பிரித்த ஈரான் போர்




ஈரான் போரை எவ்வாறு கையாள்வது என்பதில் பிரிக்ஸ் அமைப்பு பிளவுபட்டுள்ளது. இந்தப் பிளவு தனித்துவமானது அல்ல—நேட்டோ மற்றும் ஜி7 அமைப்புகளும் இதே போன்ற உள் பிளவுகளை எதிர்கொள்கின்றன. இந்தப் பிளவுகள் ஆழமான கட்டமைப்பு யதார்த்தங்களைப் பிரதிபலிக்கின்றன என ஃபாரின் பாலிசி இதழ் தெரிவித்துள்ளது.

மேலும், இந்தக் குழுக்களில் எதுவும், நெருக்கடிக்கு ஒருங்கிணைந்த முறையில் பதிலளிக்கக்கூடிய, ஒத்திசைவான புவிசார் அரசியல் கூட்டணிகள் அல்ல. அவை மாறுபட்ட தேசிய நலன்களைக் கொண்ட கூட்டணிகளாகும்; ஒரு பெரிய மோதல் கடினமான தேர்வுகளை மேற்கொள்ள நிர்பந்திக்கும்போது இந்த நலன்கள் தெளிவாக வெளிப்படுகின்றன.

ஈரான் விவகாரத்தில் பிரிக்ஸ் அமைப்பின் பிளவுக்குக் காரணம், பிரிக்ஸ் அமைப்பின் விரிவாக்கம், ஈரான் மோதலில் நேரடியாக முரண்பட்ட நலன்களைக் கொண்ட நாடுகளை உள்ளிழுத்துள்ளது. ஈரான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய இரண்டும் இப்போது பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினர்களாக உள்ளன, ஆனாலும் அவை போரில் எதிர் எதிர் பக்கங்களில் அமர்ந்துள்ளன. இது ஒரு ஒருங்கிணைந்த பிரிக்ஸ் நிலைப்பாட்டை சாத்தியமற்றதாக்குகிறது.

தொடர்ச்சி: பக்கம் 15

## ஈரானில் 204 குழந்தைகள் பலி



ஈரானில் 204 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளதாக ஈரானிய செஞ்சிலுவைச் சங்கம் வியாழக்கிழமை(19) தெரிவித்துள்ளது.

போர் தொடங்கியதிலிருந்து 204-க்கும் மேற்பட்ட குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளதாகவும், அவர்களில் ஐந்து வயதுக்குட்பட்ட 53 பேர் அடங்குவதாகவும் ஈரானிய செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. இரண்டு கர்ப்பிணிப் பெண்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

“குழந்தைகளும் கர்ப்பிணித் தாய்மார்களும் குறிவைக்கப்படும்போது, இது இனி ஒரு இராணுவச் சம்பவம் அல்ல, மாறாக மனித மாண்பு மீதான கடுமையான மீறலின் அறிகுறியாகும்,” என்று செஞ்சிலுவைச் சங்கம் கூறியது.

மேலும், 18,000-க்கும் மேற்பட்ட பொதுமக்களும் காயமடைந்துள்ளனர். கூடுதலாக, மார்ச் 8 முதல் நடந்த வான்வழித் தாக்குதல்களில் 498 பள்ளிகள், 251 மருத்துவ மையங்கள்

தொடர்ச்சி: பக்கம் 07

## பாகிஸ்தானின் ஏவுகணை அமெரிக்காவிற்கு அச்சுறுத்தல்



பாகிஸ்தானின் வளர்ந்து வரும் ஏவுகணைத் திட்டம் அமெரிக்காவிற்கு ஒரு சாத்தியமான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்று தேசிய உளவுத்துறை இயக்குனர் துளசி கபார்ட் வியாழக்கிழமை(19) கூறியுள்ளார்.

2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கையில், ரஷ்யா மற்றும் பிற நாடுகளுடன் தெற்காசிய நாடான பாகிஸ்தானையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

“ரஷ்யா, சீனா, வட கொரியா, ஈரான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள், அணு

தொடர்ச்சி: பக்கம் 14

## செயற்கை நுண்ணறிவால் வங்கிகளில் பறிபோகும் வேலை வாய்ப்பு



பிரிட்டனின் மிகப்பெரிய வங்கியான HSBC, தனது செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைக்கும் ஒரு பெரிய முயற்சியின் ஒரு பகுதியாக, வரும் ஆண்டுகளில் 20,000 வேலைகளைக் குறைப்பது குறித்து பரிசீலித்து வருவதாக ப்ளூம்பெர்க் வியாழக்கிழமை(19) செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த குறைப்புகள், லண்டனைத் தலைமையிடமாகக் கொண்ட வங்கியின் உலகளாவிய பணியாளர்களில் சுமார் 10% ஆக இருக்கும். 2025 ஆம் ஆண்டின் இறுதியில், இந்த எண்ணிக்கை சுமார் 210,000 ஊழியர்களாக இருந்தது. உலகளாவிய

தொடர்ச்சி: பக்கம் 15

 © 2026 இலக்கு இணையம்

# மத்திய கிழக்கு யுத்தம்: இலங்கைக்கு எந்த அழுத்தங்கள் வந்தாலும் அடிபணியமாட்டோம்

### ஜனாதிபதி

மத்திய கிழக்கு யுத்த நிலையில் வலுச் சக்தியை நாங்கள் முறையாக பேணுவதற்கு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தே பயணிக்கின்றோம். என்றாலும் விநியோக வலையமைப்பில் பிரச்சினை ஏற்படும் நிலைமை உள்ளது. எரிபொருள் விலை அதிகரிக்கும் நிலைமை உள்ளது. அதனால் இவற்றை சீர் செய்ய தேவையான ஒத்துழைப்பை சகலரிடம் இருந்தும் எதிர்பார்க்கின்றோம் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்



இதேவேளை, இந்த யுத்தத்தில் எமது நாட்டுக்கு எந்த அழுத்தங்கள் வந்தாலும் நாம் அடிபணியமாட்டோம் அவ்வாறு அடிபணிந்திருந்தால் அமெரிக்காவுக்கு சொந்தமான இரண்டு யுத்த விமானங்களுக்கு மத்தள விமான நிலையத்தில் அனுமதி வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்திருக்க மாட்டோம். நாம் ஒரு பக்கச் சார்பாக நடந்திருந்தால் மத்திய கிழக்குப் போர் மத்தள மற்றும் கொழும்பு துறைமுகத்திலும் இடம்பெற்றிருக்கும் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (20) இரண்டாவது நாளாக இடம்பெற்ற மத்திய கிழக்கின் போரினால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

மத்திய கிழக்கில் நிலவும் யுத்த நிலைமை தொடர்பிலும் அதன்மூலம் உலகில் பல்வேறு நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் நடக்கின் றன. இந்த விடயத்தில் நாங்கள் தொடர்ந்தும் நடுநிலை கொள்கையிலேயே இருக்கின்றோம். எமது தாய் நாட்டின் கௌரவத்தையும், நியாயம் தொடர்பான பிரச்சினையிலும் மற்றும் சர்வதேச ஏற்றுக்கொள்ளலையும் நாங்கள் நடுநிலையில் இருந்தாலே பெற்றுக்கொள்ள முடியும். எவ்வாறான அழுத்தங்கள். கஷ்டங்கள் வந்தாலும் நாங்கள் எமது நடுநிலையை கைவிட மாட்டோம்.



இந்நிலையில் நாங்கள் ஒரு குழுவுக்கு சார்பாக இருக்கின்றோம் என்றும், சில தீர்மானங்களை தேவையான நேரங்களில் எடுக்கவில்லை என்றும் சிலர் கூறுகின்றனர். இது முற்றிலும் பொய்யாகும். குறிப்பாக ஈரான் கப்பல் விடயத்தில் மூன்று கப்பல்கள் 9-13ஆம் திகதிகளில் நாட்டுக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொள்ள பெப்ரவரி 26ஆம் திகதி கோரிக்கை விடுக்கப்பட்டது. அது தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து வந்த நிலையில், அன்றைய தினத்திலேயே மாலை ஐக்கிய குடியரசினால் கடற்படைக்கு சொந்தமான இரண்டு தாக்குதல் விமானங்களுக்கு மத்தளை விமான நிலையத்தில் அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இவ்வேளையில் இரண்டு கடிதங்கள் எமது மேசையில் இருந்தன.

நாங்கள் நடுநிலையாக இருந்து போர் மூழும் சூழல் நிலவியதால் இரண்டு தரப்பினருக்கும் அனுமதி வழங்கவில்லை. இவ்வேளையில் நாங்கள் கப்பலுக்கு இடமளித்தால் மற்றைய தரப்புக்கும் இடமளித்திருக்க வேண்டி வந்திருக்கும். அவ்வேளையில் ஒரு பக்கச் சார்பாக நடந்துகொண்டிருந்தால் எம்மில் தூரத்தில் இருந்த போர் நிலைமை மத்தளை மற்றும் கொழும்பு துறைமுகத்தை நோக்கியும் வந்திருக்கும். அதற்கு நாங்கள் இடமளிக்கவில்லை.

இதேவேளை 27ஆம் திகதி ஈரான் கப்பலில் மாலுமியொருவர் கீழே விழுந்து காயமடைந்திருந்தமையினால் அவரும் இன்னுமொரு சிப்பாயும் கப்பல் உதவி நிறுவனமொன்றின் ஊடாக கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டனர். சர்வதேச சமவாயத்திற்கு அமைய நாங்கள் அந்த நடவடிக்

தொடர்ச்சி: பக்கம் 13

## ஆசிரியர் தலையங்கம் | 21 மார்ச், 2026

# உணர்ச்சியைத் தூண்டுவதால் இறைமை ஒடுக்கம் சகோதரப்பகையைத் தூண்டுவதால் தேசிய ஒடுக்கம்

இன்றைய உலக அரசியலில் உணர்ச்சியைத் தூண்டுவதால் இறைமை ஒடுக்கமும் சகோதரப்பகையைத் தூண்டுவதால் தேசிய ஒடுக்கமும் நாளாந்த அரசியலாக்கப்பட்டுக் கொண்டிருப்பதை சமகாலப் போர்க்களங்களாக உள்ள ஈரான் முதல் சிறிலங்கா வரை தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

இதற்கான செயல்நடவடிக்கைகளாக வல்லாண்மை பிராந்திய மேலாண்மை அரசுபயங்கரவாதச் செயற்பாடுகளை இனங்கண்டு மக்களுடைய இறைமைக்கான பாதுகாப்பை தேசியத்துக்கான உறுதிப்பாட்டை முன்னெடுக்கக் கூடிய தலைமைகளை கொன்றழிக்கும் அதே நேரத்தில் மக்களின் இறைமைப்பாதுகாப்புக்கும் தேசிய உறுதிப்பாட்டுக்குமான தேசநிர்மாணத்தை மீண்டெழாதவாறு அத்தகைய மக்களின் உட்கட்டுமானங்களை அவை உலகப் பொருளாதாரத்திற்கு உலக அமைதிக்கு அளித்து வரும் பங்களிப்புகளைக்கூட கவனத்தில் எடுக்காது எந்த அளவுக்கு அழிக்க முடியுமோ அந்த அளவுக்கு அழித்தொழிப்பதும், இதற்கான அனைத்துலக கூட்டாண்மைகளையும் பங்காண்மைகளையும் நவீன போர்க்கருவிகளையும் செயற்கை நுண்ணறிவு முறைமை தீர்மானம் எடுத்தல்களையும் வேகப்படுத்தி இத்தகைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளைக் கொண்ட வல்லாண்மைகள் பிராந்திய மேலாண்மைகளின் அரசியல் தலைமையை அந்த நாட்டு மக்களின் விருப்புப் பெறப்படாமலே சட்டரீதியான செயற்பாடின்றியே தன்னிச்சையாக முடிவெடுக்கும் உலக சர்வாதிகாரிகளாக வெளிப்படுவதற்கு, அந்த நாடுகளில் உள்ள ஆட்சி முறைமையையும் சட்டமுறைமையையும் மட்டுமல்ல அனைத்துலக ஆட்சி முறைமைகள் வழமைகள் ஒழுங்குமுறைமைகளையும் அனைத்துலக சட்ட முறைமைகள் நீதி முறைமைகளையும் அனைத்துலக அரசியல் ஒழுங்கமைப்பையும் பொருட்படுத்தாது ஆயுதபலத்தால் இனங்காணக்கூடிய அச்சத்தை உருவாக்கி உலக மக்களை அடிமைப்படுத்துவது என்பதே இன்றைய சமகால அரசியலாக உள்ளது.

இதற்கான இவ்வார எடுத்துக்காட்டுகளாக ஈரானில் அமெரிக்கா - இஸ்ரேல் நடாத்தும் எந்த நியாயப்படுத்தலும் இல்லாத உலக இயற்கை வளங்களை அழித்தொழிக்கும் முயற்சிகளும் உலகப் பொருளாதாரத்தை முடக்குவதன் மூலம் உலகின் அரசியலின் பன்முனைவாக்கத்தை மீளவும் அமெரிக்கா சார்ந்த ஒரு முனைவாக்கமாகவும் இஸ்ரேல் சார்ந்த ஒரு ஆயுதப்பலமாகவும் நிலைப்படுத்தும் மனிதநாகரிகத்துக்கும் மனிதாயத்துக்கும் எதிரான போர்ச்செயற்பாடுகள் அமைகின்றன.

அவ்வாறே 2009 முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் பின்னர் இதுவரை “மக்கள் மேலான போரை” பனிப்போராக ஈழத்தமிழர்கள் மேல் இன்று வரை 17 ஆண்டுகளாக நடாத்தி வரும் சிறிலங்கா அரசாங்கம் , இந்த “மக்கள் மேலான போரின்” தொடர்ச்சியாகக் கடந்த வாரத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் சனநாயகப் போராட்டத்தினை படைபலத்தைக்கொண்டு அடக்கும் முறைமையிலான சிறிலங்கா பொலிசாரின் செயலாக மாற்றியுள்ளது. யாழ் பல்கலைக்கழக வளாகத்துள் நடந்த பொலிஸாரின் அத்துமீறல் உள் நுழைவும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர்கள் உட்பட அரசியல் விழிப்புணர்வுள்ள மூன்று பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களை 5மணி நேர விசாரணைக்கு உட்படுத்தியதும், அந்தக்கோர்ப்பினை சட்டமாஅதிபரிடம் மேல்நடவடிக்கைக்காக அனுப்பியுள்ளதும் அமைகிறது.

இச்செயற்பாடு ஈழத்தமிழ் இளையோரிடையே உணர்ச்சியைத் தூண்டி அவர்கள் உண்மைக்காகவும் நீதிக்காகவும் செயற்பட முற்படுகையில் அவர்கள் சிறிலங்காவின் ஒருமைப்பாட்டுக்கும் இறைமைக்கும் எதிராகச் செயற்படுகின்றார்களென சிறிலங்காவின் அரசியலமைப்பின் 6வது திருத்தத்தின் அடிப்படையில் குற்றம் செய்தவர்களாக சந்தேகத்துக்குள்ளாக்கி, அனைத்துலக சட்டங்களுக்கு அமையாத வகையில் 1979 முதல் இன்று வரை 47 ஆண்டுகள் ஈழத்தமிழர்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் நாளாந்த வாழ்வுக்கும் இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி வரும் சிறிலங்காவின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அவர்களின் வாழ்வை முடக்கிவிட இன்றைய சிறிலங்கா அரசாங்கமும் முயற்சித்துள்ளது.

இந்த இனங்காணக்கூடிய அச்சுறுத்தல் வழி அரசியல் விழிப்புணர்வுள்ள மற்றைய ஈழத்தமிழ் இளைஞர்களின் சனநாயகப் போராட்ட உரிமைகளையும் அடக்கி ஒடுக்கும் செயலாக இது உள்ளது. இதனை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்ழகச் சமூகமுமே சனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. இதனை சிறிலங்காவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதமரும் உயர்கல்வி அமைச்சருமான ஹரிணி அவர்களும் சிறீலங்காவில் இனவாதத்திற்கு இனி இடமில்லையென்னும் அரசத்தலைவர் அநுரா அவர்களும் எந்த அளவுக்கு நீதியின் அடிப்படையில் அணுகுவார்கள் என்பதிலேயே அவர்கள் உருவாக்கி வருவதாகக் கூறும் “மாற்றம்” என்பதன் உண்மை நிலையை உலகு கண்டுகொள்ளும் என்பதே இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கடந்த வார நிகழ்வு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்குள்ளேயே பிரதமரதும் அரசத்தலைவரதும் ஆணைக்குக் கட்டுப்படாத மக்கள் விடுதலை முன்னணியின் சக்திகள் மேலோங்கி வருகின்றனவா என்ற சந்தேகத்தையும் எழுப்பியுள்ளது. அவ்வாறாயின் அதே மக்கள் விடுதலை முன்னணியினரின் செயற்பாடாக “ஏக்கிய ராஜ்யத்தை” விட மிகமோசமான சிங்கள இனத்தின் நாடு சிங்கள மொழிக்குரிய நாடு பௌத்த ஆகம சட்டங்களுக்கு உரிய நாடு என்பதை நடைமுறைப்படுத்தும் ஆனால் சீனபாணியிலான அரச ஆட்சிமுறைமையை நடைமுறைப்படுத்தலென்றும், நிறைவேற்று அதிகாரமுள்ள அரசத்தலைவர் முறைமைய மாற்றுதல் என்றும் பல மயக்கத் தலைப்புகளில் கொண்டுவரவுள்ள புதிய அரசியலமைப்பு விரைவில் அமையப்போகிறதா என்கின்ற கேள்வி எழுகிறது.

இதனை உலகப் போர்மேகப் பின்னணியில் அனைத்துலகத் தமிழரின் கண்ணில் மண்ணைத் தூவி தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்கிறதா என்பதே இவ்வாரத்தில் இலக்கின் கவனயீர்ப்பாக உள்ளது. இதற்கான அனைத்துலகப் பலத்தை ஒரு சில நாடுகள் சிறிலங்காவின் உள்ளும் ஐக்கிய நாடுகள் சபை மட்டத்திலும் வேகப்படுத்துகின்றனவா என்பதே அடுத்த கேள்வி. ஈழத்தமிழின அழிப்பில் ஈடுபட்ட சிறிலங்காவின் கஜபாகு கப்பலினை அமெரிக்க விசேட பிரதிநிதி பார்வையிட்டதும் மே 24 இல் பத்து அமெரிக்க நவீன உலங்குவானூர்திகள் சிறிலங்காவின் கடற்படையில் இணைக்கப்படுவதும் இந்த இணைப்பை மூடிமறைக்கக் கூடிய முறையில் சிறிலங்காவின் அரசத்தலைவர் ஈரானும் அமெரிக்காவும் ஒரே நாளில் இலங்கைக் கடற்பரப்புக்குள் வருவதற்கு உதவி கோரிய பொழுதிலும் தாங்கள் அமெரிக்காவை அனுமதிக்காது ஈரானை அனைத்துலக சட்டங்களின் அடிப்படையில் அனுமதித்தார்கள் எனத் தனது உரையில் கூறியுள்ளதும் மிகக்கவனமாக ஆய்வுக்குள்ளாக்கப்பட வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார முன்னெச்சரிக்கையாக உள்ளது.

**ஆசிரியர்**



# இந்தோ-பசுபிக் சதுரங்கத்தில் இலங்கை

# ‘அமெரிக்க அழுத்தங்களும் ஈரானியத் தத்தளிப்பும்’

**விதுரன்**

மத்திய கிழக்கில் ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையே மூண்டுள்ள போர் மேகங்கள், தற்போது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை பதற்றமான போர்க்களமாக மாற்றியிருக்கின்றன.

குறிப்பாக, இலங்கையின் கடல் எல்லைக்கு மிக அருகாமையில் ஈரானியப் போர்க்கப்பலான ஐ.ஆர்.ஐ.எஸ். டெனா, அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலினால் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம், சர்வதேச அரசியல் அரங்கில் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்த விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் தான் ஒரு ‘நடுநிலை’ நாடாகச் செயற்படுவதாகக் கூறிக்கொண்டாலும், கள யதார்த்தங்கள் அமெரிக்காவின் பலமான அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணிந்து போயுள்ளதையே அப்பட்டமாக வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

வெளிவிவகார அமைச்சு இதனை மறுத்தாலும், ஈரானிய மாலுமிகள் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விதமும், அமெரிக்கத் தூதுவர்களின் தொடர்ச்சியான விஜயங்களும் இந்த விவகாரத்தின் பின்னணியில் உள்ள மர்மங்களை உறுதிப்படுத்துகின்றன.



கடந்த மார்ச் 4ஆம் திகதி காலிக் கடற்பரப்புக்கு அப்பால் 19 கடல் மைல் தொலைவில் ஈரானின் ‘ஐ.ஆர்.ஐ.எஸ் டெனா’ போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்ட போது, இலங்கை ஒரு இறையாண்மையுள்ள நாடு என்பதை விடவும், கண் கட்டப்பட்ட சாட்சியாகவே இருந்தது.

இலங்கைக்குத் தெரியாமலேயே அதன் எல்லைக்கு மிக அருகில் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலொன்று உலவி, ஒரு திட்டமிட்ட தாக்குதலை நடத்தியிருப்பது சர்வதேச போரியல் வல்லுனர்களிடையே பாரிய கேள்விகளை எழுப்பியுள்ளது.

இந்தியா மற்றும் இலங்கை போன்ற பிராந்திய நாடுகளின் பாதுகாப்பையும் நட்புறவையும் துச்சமாக மதித்து, அமெரிக்கா தன்னிச்சையாக எடுத்த இந்த முடிவு, இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு எந்தளவுக்கு பலவீனமாக உள்ளது என்பதை உணர்த்துகிறது.

இந்தச் சம்பவத்தின் நீட்சியாக, ஈரானிய மாலுமிகள் மற்றும் விநியோகக் கப்பலான ‘ஐ.ஆர்.ஐ.எஸ். புஷேர்’ தொடர்பான விவகாரத்தில் நீடிக்கும் இழுபறிகள் இலங்கையின் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை கேள்விக்குள்ளாக்குகின்றன.

மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் இருந்து மீட்கப்பட்ட மாலுமிகளும், விநியோகக் கப்பலில் இருந்த 208பேரும் தற்போது வெலிசரை கடற்படைத் தளத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களை ‘தங்க வைக்கப் பட்டுள்ளனர்’ என்பதை விட, ‘தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்’ என்பதே பொருத்தமானதாக இருக்கும்.

இவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படாமல் குறிப்பிட்ட எல்லைக்குள் முடக்கப்பட்டுள்ளனர். அதே வேளையில், இந்தியாவில் இதேபோன்ற சூழலில் புகலிடம் தேடிய ஈரானின் மூன்றாவது கப்பலும் 130பேரும் இந்திய அரசாங்கம் உடனடியாக ஈரானுக்குத் திருப்பி அனுப்பிவிட்டது.

ஆனால், இலங்கை மாத்திரம் அவர்களைத் திருப்பி அனுப்புவதில் சிக்கல்களை எதிர்கொள்கிறது. ஈரானிய வெளியுறவு அமைச்சருடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் நடத்திய பேச்சுவார்த்தைகளில், சர்வ தேச சட்டங்களுக்கு அமைவாகவே செயற்படுவதாகக் கூறினாலும், உயிருடன் உள்ள மாலுமிகளை உடனடியாக அனுப்ப முடியாது என்ற பிடிவாதம் அமெரிக்காவின் திருப்திக்காகவே எடுக்கப்பட்ட முடிவாகப் பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா எப்போது ‘பச்சைக்கொடி’ காட்டுகிறதோ, அப்போதுதான் இந்த மாலுமிகள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நிலையே இன்று காணப்படுகிறது.

விநியோகக் கப்பலான ‘ஐ.ஆர்.ஐ.எஸ். புஷேர்’ கப்பலை திருகோணமலைத் துறைமுகத்திற்கு இழுத்துச் செல்வதில் நிலவும் தாமதங்களும் சந்தேகங்களை வலுப் படுத்துகின்றன.

5000 தொன் எடை கொண்ட இந்தக் கப்பலில் 2000 தொன் எரிபொருள் உள்ள நிலையில், அதனை இழுத்துச் செல்வதற்கான போதிய வசதிகள் இலங்கை கடற்படையிடம் இல்லை.

இதற்காக 2 இலட்சம் டொலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு, அந்தச் செலவை ஏற்க ஈரான் முன்வந்தும் கூட, பணிகள் மந்தகதியிலேயே உள்ளன.

உண்மையில், இந்தக் கப்பலை கொழும்புத் துறைமுகத்திற்குள் கொண்டு வர அரசாங்கம் அஞ்சியதற்கு முக்கிய காரணம், அமெரிக்கா அல்லது இஸ்ரேல் இந்தக் கப்பலையும் இலக்கு வைக்கக்கூடும் என்பதாலாகும். தனது நாட்டின் பாதுகாப்பு வளையத்திற்குள் இருக்கும் ஒரு வெளிநாட்டுக் கப்பலுக்குப் பாதுகாப்பளிக்க முடியாத அளவுக்கு இலங்கை பலவீனமடைந்துள்ளது அல்லது அமெரிக்காவின் தாக்குதல் அச்சத்திற்கு அடிபணிந்துள்ளது என்பது தெளிவாகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது, அமெரிக்கப் போர் விமானங்கள் மத்தளை விமான நிலையத்தில் தரையிறங்கக் கோரிய அனுமதியை தாம் நிராகரித்ததாகவும் ஈரானின் மூன்று கப்பல்கள் பிரவேசிப்பதற்கான அனுமதியை ஆராய்ந்து வந்ததாகவும் குறிப்பிட்டு, ‘நடுநிலையை’ நிரூபிக்க முயன்றார்.



அநுரவின் கருத்தின் பிரகாரம், ஈரான் கப்பல் விடயத்தில் மூன்று கப்பல்கள் மார்ச் மாதம் 9-13ஆம் திகதிகளில் கொழும்புத்துறைமுகத்துக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொள்ள பெப்ரவரி 26ஆம் திகதி கோரிக்கை விடுக்கப்பட்டது.

அது தொடர்பில் இலங்கை ஆராய்ந்து வந்த நிலையில், பெப்ரவரி26ஆம் திகதி மாலை ஐக்கிய அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான இரண்டு தாக்குதல் விமானங்கள் எட்டு ஏவுகணைகளுடன் மத்தளை விமான நிலையத்தில் அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈரானின் மூன்று கப்பல்களின் நல்லெண்ண விஜயக்கோரிக்கை ஒரு தற்காப்பு முயற்சியாக இருந்தாலும் எட்டு ஏவுகணைகள் பொருத்தப்பட்ட அமெரிக்க விமானங்கள் இலங்கையைப் பயன்படுத்த அனுமதி கோரியதே, அமெரிக்கா இலங்கையைத் தனது ஒரு போர் முகாமாக மாற்ற முயல்வதைக் காட்டுகிறது.

தொடர்ச்சி: பக்கம் 08

# திருகோணமலை துறைமுகமும், திருத்தப்படாத எண்ணெய்க்குதங்களும்

## ஈரான் யுத்தம் சொல்லும் செய்தி..!



பா.அரியநேத்திரன்

திருகோணமலை துறைமுகம், உலகின் ஐந்தாவது மிகப் பெரிய பாதுகாப்பான இயற்கை துறைமுகங்களில் ஒன்றாகும். இது இந்தியப் பெருங்கடலின் மையத்தில் அமைந்து, ஆசிய கப்பல் போக்குவரத்துப் பாதையில் முக்கிய கடற்படை மற்றும் வணிக மையமாக விளங்குகிறது. வரலாற்று, இராணுவ, பொருளாதார மற்றும் புவிசார் அரசியலில் முக்கிய பங்கு வகிக்கும் இது, “இந்தியப் பெருங்கடலின் சாவி” என்றும் அழைக்கப்படுகிறது.



திருகோணமலை துறைமுகத்தின் முக்கியமாக பாதுகாப்பான இயற்கை மலையரண்களால் சூழப்பட்ட ஆழமான கடற்பரப்பைக் கொண்டிருப்பதால், இயற்கை இடர்பாடுகளிலிருந்து முழுமையான பாதுகாப்பு கொண்டது. கிழக்கு ஆசியாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான பிரதான கடல் பாதையில், இந்தியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவை இணைக்கும் மையப்புள்ளியில் அமைந்துள்ளது.

பண்டைய காலம் முதல், சோழர், பாண்டியர் , பிரித்தானியர் வரை இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, கடற்படை தளமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

பொருளாதார பொருட்களை ஏற்றி இறக்குதல், பாரிய தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு உகந்த இடமாக விளங்குகிறது.

ஜப்பான் உதவியுடன், இரவு நேர கப்பல் போக்குவரத்திற்கும் ஏற்ற வகையில் இத்துறைமுகம் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. இந்த துறைமுகமானது இரண்டு பகுதிகளைக் கொண்டது. உள் துறைமுகம், மற்றும் வெளித் துறைமுகம். உட்துறைமுகம் பாறைகளும், நிலங்களும் சூழ்ந்தது மட்டுமில்லாமல், இயற்கையாகவே ஆழம் அதிகமானதும் ஆகும். இதனால் நீர்முழ்கிக் கப்பல்கள் முதல் சாதாரண கப்பல்கள் வரை இங்கே பாதுகாப்பாக இருக்க முடியும். ரேடார் மற்றும் சோனார் மூலமான கண்காணிப்புகளில் இருந்து தப்பிக்கவும் முடியும்.

இவ்வாறான வரலாற்று பின்னணியைக்கொண்ட துறைமுகமான உலகபோராட்டங்களிலும், ஈழப்போராட்டங்களிலும் இலங்கை அரசுக்கு பாதுகாப்பான கேந்திரமாகவும் அமைந்துள்ளது.

1795ல் பிரித்தானியரின் வசம் இருந்த திருகோணமலை துறைமுகம் முதலாம் உலகப்போர் காலத்தில் 1914ம் ஆண்டு தொடக்கம் 1918 வரை பிரித்தானிய அரச கடற்படையின் முக்கியமான ஆசிய பசிபிக் தளமாகவும், எரிபொருள் நிரப்பும் நிலையமாகவும், பாதுகாப்பு அரணாகவும் செயல்பட்டது.

இந்தியப் பெருங்கடலில் பிரித்தானியக் கப்பல்களின் இயக்கத்திற்கும், சிங்கப்பூர் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆசிய பிராந்தியத்தில் நேச நாட்டு கடற்படை பாதுகாப்பிற்கும் இத்துறைமுகம் முக்கிய பங்காற்றியது. ஆசியாவின் மிக பாதுகாப்பான இயற்கை துறைமுகங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

இரண்டாம் உலகப்போர் காலமான 1939 ம் ஆண்டு தொடக்கம் 1945ம் ஆண்டுவரை திருகோணமலை துறைமுகம் பிரித்தானியரின் மிக முக்கிய கடற்படை மற்றும் விமானப்படைத் தளமாக விளங்கியது. ஜப்பானியப் படைகள் ஆசியாவைக் கைப்பற்றிய போது, இந்த இயற்கை துறைமுகம் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் நேச நாடுகளின் முக்கிய மூலோபாய மையமாகத் திகழ்ந்தது.

1942 ஏப்ரல் 09 ல் ஜப்பானிய விமானத் தாக்குதல்களுக்கு உள்ளான இத்துறைமுகத்தில், கப்பல் கட்டும் தளம் மற்றும் எரிபொருள் சேமிப்பு நிலையங்கள் சேதமாக்கப்பட்டன இன்றும் அது வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன.

திருகோணமலை துறைமுகத்தில் 99 எண்ணெய் குதங்கள் உள்ள நிலையில் 2003ஆம் ஆண்டில் இருந்து அடுத்த 35 ஆண்டுகளுக்கு 15 எண்ணெய் குதங்கள் மட்டுமே இந்திய ஐ ஓ சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு இயங்குகிறது. ஏனை 84 குதங்கள் துருப்பிடித்த நிலையில் இயங்கவில்லை என அறியமுடிகிறது .



அந்த 84 பழைய குதங்களை சீரமைத்து, பயன்பாட்டுக்குக் கொண்டுவர இந்தியா (லங்கா ஐஓசி) மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணைந்து செயல்பட்டன. ஆனால் நிதி ஆதாரம் மற்றும் தொழில்நுட்ப காரணங்களால் முழுமையான புனரமைப்பு தாமதமாகி வருகிறது.

இவ்வாறான வரலாற்று பின்னணிகளைக் கொண்ட துறைமுகத்தில் இலங்கைக்கு தேவையான எரிபொருட்களை சேமித்துவைக்க கூடிய எண்ணெய் குதங்கள் அமைந்திருந்தும் அதனை முறையாக பயன்படுத்தபடாமையினால் அது சேதமாகியுள்ளதாக அறியமுடிகிறது.

திருகோணமலை துறைமுகத்தில் எண்ணெய் குதங்கள் இயங்கா நிலையில் கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த எந்த ஜனாதிபதிகளும் இதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

அதனை திருத்த நடவடிக்கை எடுக்காதது க்கும் தற்போதைய தேசிய மக்கள் கட்சியான அன்றைய ஜே வி பி கட்சிதான் காரணம் என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் வசிர அபேசேகரா கடந்த 19/03/2026 ல் ஊடகங்களுக்கு கூறியிருந்தார்.



குறிப்பாக 2002 தொடக்கம் 2004 வரையும் 2015 தொடக்கம் 2020 வரை நல்லாட்சிகாலத்திலும் 2022 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதியில் எல்லாம் ரணில் விக்கிரமசிங்கா திருகோணமலை துறைமுகத்தில் உள்ள பழுதடைந்த எண்ணெய்க்குதங்களை திருத்த எடுத்த முயற்சிகளை ஜே வி பி தடுத்தமையால் அங்கு எரிபொருள்கள் களஞ்சியப்படுத்தமுடியாமல் போனது என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.



உண்மையில் அவரால் பட்டியல் இட்ட காலங்களில் ஆட்சியில் இருந்த மகிந்தராசபக்ஷ, மைத்திரி, கோட்டபாய, ரணில் எவருமே திருகோணமலை எண்ணெய்குதத்தை திருத்துவதற்கான அக்கறை காட்டவில்லை. ஒரு கட்சி தடுத்ததால் ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி அதனை ஏன் செய்யவில்லை என்ற சந்தேகம் பலரிடம் உண்டு.

கடந்த கடந்த 2026 மார்ச் 04 ஆம் திகதியன்று இந்தியக் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுவிட்டு

தொடர்ச்சி: பக்கம் 14




**இலங்கையின் சமகால அரசியல் மற்றும் சட்டச் சூழலில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ள புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்ட மூலம் *(PSTA)* குறித்து விளக்கு வதற்காக, "தாயகக் களம்" நிகழ்ச்சியில் சட்டவாளர் பெனிஸ்லஸ் துசான் அவர்கள் இணைந்துள்ளார்.**

**நீண்டகாலமாக ஒடுக்குமுறைக்குக் காரணமாக இருந்த பழையபயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு *(PTA)* மாற்றீடாக கொண்டுவரப்படும் இந்தச் சட்டமூலம், உண்மையில் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்குமா அல்லது மேலதிக ஒடுக்குமுறைக்கு வழிவகுக்குமா? என்பது குறித்து அவர் விரிவாகப்பகிர்கிறார்.**

**கேள்வி :**

**இலங்கையில் நீண்ட காலமாக நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) மற்றும் தற்போதுNPP அரசால் முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்ட மூலம் (PSTA) ஆகியவற்றின் பின்னணி என்ன?**

**பதில் :**

இலங்கையில் 1979ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் ஒரு தற்காலிக ஏற்பாடாகவேபயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) அறிமுகப் படுத்தப்பட்டது. ஆனால், அது கடந்த 47 ஆண்டுகளாகத் தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது. இச்சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தகுந்த நீதி விசாரணை எதுவுமின்றி தசாப்த காலங்களாகச் சிறைகளில் வாடினர்.

தற்போதைய NPP அரசாங்கம், தாம் எதிர்க் கட்சியில் இருந்தபோதும் தேர்தல் காலங்களிலும் "அடக்கு முறைச்சட்டங்களை நீக்குவோம், குறிப்பாக PTA சட்டத்தை முற்றுமுழுதாக அகற்றுவோம்" என்று வாக்குறுதி அளித்தது. ஆனால், ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தைக் கடந்த நிலையிலும் அவர்கள் அச்சட்டத்தை நீக்கவில்லை. மாறாக, பழைய PTA சட்டத்தை விடவும் மிகவும் கோரமான, சிவில் மற்றும் மனித உரிமைகளை முற்றாக மீறக்கூடிய 'அரசைப்பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும்' (PSTA) புதிய சட்டமூலத்தை 2025 நவம்பரில் கொண்டு வர முயற்சிக்கிறார்கள்.

**கேள்வி :**

**பழைய PTA சட்டத்திற்கும் புதிய PSTA சட்ட மூலத்திற்கும் இடையிலான சட்ட ரீதியான ஒப்பீடுகள் மற்றும்அதில் மறைந்துள்ள அபாயங்கள் எவை?**

**பதில் :**

பழைய சட்டத்தில் (PTA) நிர்வாகத் தடுப்புக்காவல் (Administrative Detention) என்பது நீதிமன்றச்செயல் முறையைத் தாண்டி ஒருவரைச் சந்தேகத்தின் அடிப் படையில் சிறையில் அடைக்கப் பயன்படுத்தப்பட்டது. இதில் 2022ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தின்படி 12 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்க முடிந்தது. புதிய PSTA சட்டமூலத்தைதிலும் 12 மாதங்கள் தடுப்புக்காவலில் வைக்க முடியும் என்பதோடு, மேலதிகமாக 12 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கலாம். ஆக மொத்தம் 24 மாதங்கள் ஒருவரைத் தடுத்து வைக்க இச்சட்டம் வழிவகைசெய்கிறது.

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு பெனிஸ்லஸ் துசான் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர் களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

முக்கியமான வேறுபாடுகள் பின்வருமாறு:

- இராணுவமயமாக்கல்: PTA சட்டத்தில் அவசரகால நிலையில் மட்டுமே இராணுவத்தினருக்குக் கைது செய்யும் அதிகாரம் இருந்தது. ஆனால் புதிய சட்டத்தில், சாதாரண சூழலில் முப்படையினருக்கும் சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்யவும், வீடுகளைச் சோதனையிடவும் அதிகாரம் வழங்கப்படுகிறது. இது நாட்டை எப்போதும் ஒரு அவசர கால நிலையில் வைத் திருப்பதற்குச் சமமாகும்.
- பரந்துபட்ட வரைவிலக்கணம்: சர்வதேச மனித உரிமை நியமங்களின்படி (ICCPR), ஒரு குற்றத்திற்கான வரைவிலக்கணம் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். ஆனால் இச்சட்டத்தில் 'பயங்கரவாதம்' என்பதற்கு 13 வகையான மிக விரிவான விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன.பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்துவது அல்லது அரசாங்கத்திற்கு எதிராகக் கருத்துச் சொல்வது கூடப் பயங்கரவாதமாகச் சித்திரிக்கப்பட வாய்ப்புள்ளது.
- தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடு: காவல்துறையினர் எவருடைய வங்கி விபரங்களையும் கோரலாம், தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்கலாம் மற்றும் மின்னணுச் சாதனங்களைப் பறிமுதல் செய்யலாம்.

**கேள்வி :**

**தொழில்முறை இரகசியங்களைப் பாதுகாக்கும் உரிமை மற்றும் சித்ரவதைகளுக்கு எதிரான பாதுகாப்பு இச்சட்டத்தில் எவ்வாறு பாதிக்கப்படுகிறது?**

**பதில் :**

இச்சட்டத்தில் 'தகவல் வெளிப்படுத்தும் கடமை' (ResponsibilitytoDisclose)என்றபுதியஅம்சம்சேர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு சட்டத்தரணி, ஊடகவியலாளர் அல்லது மருத்துவர் தமது தொழில் தர்மத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர் அல்லது நோயாளியிடமிருந்து பெறும் இரகசியத் தகவல்களை காவல்துறையினர் தெரிவிக்கத் தவறினால், அவர்களும் பயங்கரவாதத்திற்குத் துணை நின்றதாகக் கருதப்படலாம். இது கருத்துச் சுதந்திரத்தையும் தொழில்முறை சுதந்திரத்தையும் முழுமையாக முடக்கும் செயலாகும்.

மேலும், இராணுவத்தினர் ஒருவரைக் கைது செய்தால் 48 மணி நேரம் வரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். இந்த நேரத்தில் சித்திரவதைகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். நீதிமன்றக் கண்காணிப்பு என்பது இச்சட்டத்தில் மிகவும் மட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகிறது. ஒரு நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டாலும், தடுப்புக்காவல் உத்தரவு (Detention Order) இருந்தால் நீதிவானால் கூட ஒன்றும் செய்ய முடியாத நிலை உள்ளது.

**கேள்வி :**

**அரசியல் ரீதியாக இச்சட்டம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? குறிப்பாகத் தென்னிலங்கை மற்றும் வடகிழக்கு மக்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில் :**

இச்சட்டம் உண்மையில் ஜனநாயகம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் கருவியாகும். ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்தவொரு அமைப்பையும் 'பயங்கரவாத அமைப்பு' என்று தடை செய்ய முடியும். அவ்வாறு தடை செய்யப்பட்டால் அதற்கு எதிராக நீதிமன்றம் செல்லவும் இச்சட்டம் இடமளிக்கவில்லை.

தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள் இதற்கு எதிராகக் குரல் எழுப்புகின்றன. ஆனால், அவர்கள் முன்பு ஆட்சியில் இருந்த போது PTA சட்டத்தை மிக மோசமாகப் பயன்படுத்தியவர்களே. தற்போதைய அரசியல் சூழலில் தமது பாது காப்பிற்காக அவர்கள் இச்சட்டத்தை எதிர்க்கக் கூடும். வடகிழக்கில் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் தலைமைகள் இதற்கு எதிராகப் பல விழிப்புணர்வுப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. சர்வதேச அளவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை (UNHRC) இச் சட்டம் குறித்து ஜனாதிபதிக்கு 20 பக்கங்கள் கொண்ட விரிவான கண்டனக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

• • •

# ஆரோக்கியமான நதிகளுக்காகவும் உறுதியான சமூகக் கட்டமைப்புக்காகவும் பெண்களை வலுப்படுத்துதல்

நீர் வாழ்க்கையின் அடித்தளம். நதிகள் எங்கள் சுற் றுச் சூழல், வேளாண்மை மற்றும் சமூகங்களை தாங்கி நிற்கும் உயிர்நாடிகள். உலக நீர் தினம் 2026 இன் கருப்பொருள் “நீர் மற்றும் பாலினம்”(Water and Gender) என்பதால், நீர் மேலாண்மை என்பது சுற்றுச்சூழல் அல்லது பொறியியல் சவாலாக மட்டும் இல்லாமல் ஒரு சமூகப் பொறுப்பாகவும் இருப்பதை நினைவூட்டுகிறது. பல சமூகங்களில் பெண் கள் குடும்ப நீர் பயன்பாட்டை நிர்வகிப்பதிலும், குடும்ப ஆரோக்கியத்தை பாதுகாப்பதிலும், நதிகளுடன் தொடர்பு டைய வாழ்வாதாரங்களை நிர்வகிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.



எனவே நதிகளை நிலைத்தன்மையுடன் முகாமை செய்வதில் நீர்வளங்களுக்கும் பாலின சமத்துவத்திற்கும் இடையிலான முக்கிய தொடர்பை உணர்ந்து செயல்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். நதி மேலாண்மை அடிப்படையில் நோக்கின், மாசுபாடு, கட்டுப்பாடற்ற வள சுரண்டல் மற்றும் நதிக் கரையரிப்பு ஆகியவற்றிலிருந்து நதிகளை பாதுகாப்பது இயற்கையைப் பாதுகாப்பதற்காக மட்டுமல்ல, தினமும் இந்நதிகளை நம்பி வாழும் சமூகங் களின், குறிப்பாக பெண்களின் நலன், மரியாதை மற்றும் நிலைத்தன்மையை பாதுகாப்பதற்காகவும் ஆகும்.

### நீர் மற்றும் நதி சார்ந்து பெண்களின் பங்கு

உலகின் பல பகுதிகளில் பெண்களே குடும்ப நீர் பயன் பாட்டின் முதன்மை நிர்வாகிகளாக உள்ளனர். குறிப்பாக கிராமப்புற சமூகங்களில், பெண்கள் குடிநீர், சிறு அளவி லான விவசாயம், கால்நடை பராமரிப்பு, சுகாதாரம் மற்றும் உணவு தயாரிப்பு போன்ற தேவைகளுக்காக நேரடியாக நதிகளைச் சார்ந்துள்ளனர். இந்த நெருக்கமான தொடர்பி னால், நீர் பற்றாக்குறை, நதி மாசுபாடு மற்றும் வெள்ளப் பாதிப்புகளை முதலில் அனுபவிப்பவர்கள் பெண்களே ஆகும்.



நதி மேலாண்மை பார்வையில்(River management perspective), நதிக் கரையரிப்பு, அடைமண் தேக்கம்(Sedimentation) மற்றும் நதி நீர் மாசுபாடு ஆகியவை சமூகங்களின் நீர் பெறு நிலையையும் (Community water access), குடும்ப நலனையும் நேரடியாக பாதிக்கின்றன. நதிகள் சரியாக மேலாண்மை செய்யப்படாதபோது, பெண்கள் பாதுகாப்பான நீரை சேகரிக்க நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இது அவர்களின் உடல் சுமையை அதிகரிப்பதோடு, கல்வி, வருமானம் ஈட்டும் வாய்ப்புகள் மற்றும் குடும்பத்துக்காக செலவிடும் நேரத்தையும் குறைக்கிறது. மேலும், இது அவர்களின் வாழ்வியலைப் பாதிக்கிறது.

### நதிகள் சேதமடைதலும் பெண்களில் ஏற்படுத்தும் தாக்கங்களும்

மோசமான நதி மேலாண்மை பல சமயங்களில் பெண்களை அதிகமாக பாதிக்கிறது. உதாரணமாக, சட்டவிரோத மணல் அகழ்வு நிலத்தடி நீர்மட்டத்தை குறைத்து அருகிலுள்ள கிணறுகளை உலரச்செய்கிறது. இதனால், வீட்டிற்கு நீர் சேகரிப்பதற்கான பாரம்பரிய பொறுப்பை ஏற்றுள்ள பெண் கள் பாதுகாப்பான குடிநீரைக் கண்டுபிடிக்க நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. கழிவுகள், வேளாண் ரசாயனங்கள் மற்றும் தொழிற்சாலை கழிவுகளால் ஏற்படும் நதி மாசு பாடு குடும்பங்களின் ஆரோக்கியத்துக்கு அபாயத்தை ஏற் படுத்துகிறது. ஏனெனில் மாசுபட்ட நீரே சமையல், கழுவுதல் மற்றும் பிற குடும்ப தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது. மேலும், வெள்ளப் பேரழிவுகள் பெண்களையும் குழந்தை களையும் அதிகமாக பாதிக்கின்றன, ஏனெனில் இயற்கை அனர்த்தங்களின் போது அவர்கள் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் அடிப்படை தேவைகளுக்கான பெறு நிலையில் அதிக சவால்களை எதிர்கொள்கின்றனர்.

**எந்திரி.சி.ஜெயன் பார்த்தசாரதி**
பிரதம பொறியியலாளர்,
நதிகள் மேலாண்மைப் பிரிவு,
நீர்பாசனத் திணைக்களம்.

மேலும், நதிக்கரையரிப்பு மற்றும் சூழலியல் சேதம் பல கிராமப்புற பெண்கள் குடும்ப உணவு மற்றும் வருமானத்திற்காக நம்பும் வீட்டுத்தோட்டங்கள், சிறு விவசாய நிலங்கள் மற்றும் கால்நடை வளங்களை அழிக்கிறது. நதிக்கரையில் பாதுகாப்பான நீர் பெறும் இடங்கள் இல்லாமல் போனால் பெண்களின் உடல் சுமை மேலும் அதிகரிக்கும். இதனால் கல்வி, குடும்பம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான நேரம் குறைகிறது. மேலும், சரியான நதி மேலாண்மை இல்லாதபோது சமூக மற்றும் சுகாதார நடைமுறைகள் பாதிக்கப்படுவதால் நீரால் பரவும் நோய்களின் அபாயமும் அதிகரிக்கிறது.

எனவே, சரியான நதி மேலாண்மை என்பது நதிச் சூழலியலை பாதுகாப்பதற்காக மட்டுமல்ல, சமூகங்களின் வாழ்வாதாரம், வேளாண்மை மற்றும் குடும்ப நீர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் மிக அவசியமானதாகும். சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துதல், நதி மாசு பாட்டைத் தடுத்தல், நதிக்கரைகளை பாதுகாத்தல் மற்றும் வெள்ள மேலாண்மையை மேம்படுத்துதல் போன்ற நிலைத்தன்மையான நதி முகாமைத்துவ நடவடிக்கைகள் பெண்களின் சுமையை குறைத்து ஆரோக்கியமான மற்றும் உறுதியான சமூகங்களை உருவாக்க உதவுகின்றன.

### நதிகளின் பாதுகாப்பில் பெண்களின் வகிபாகம்

பெண்கள் நதி மேலாண்மையில் செயற்திறனுடன் பங்கேற்க ஊக்குவிக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் தினசரி நீர்வளங்களுடன் தொடர்பில் இருப்பதால் மதிப்புமிக்க அறிவும் அனுபவமும் பெற்றுள்ளனர். அவர்களின் பங்கேற்பு சமூக அடிப்படையிலான நதி மேலாண்மை முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும். மாசுக் கட்டுப்பாடு குறித்து குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும் அவர்கள் முக்கிய பங்கு வகிக்க முடியும். மேலும், மரநடுகை, மண் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளை (Watershed area) பாதுகாப்பது போன்ற செயற்பாடுகளிலும் பெண்கள் ஈடுபடலாம். வெள்ளத்திற்கான முன் தயாரிப்புகள், சமூக எச்சரிக்கை அமைப்புகள்(Community warning systems) மற்றும் அவசரத் திட்டமிடலில் அவர்களின் பங்கேற்பு பேரழிவை எதிர்கொள்ளும் திறனை அதிகரிக்கும். பெண்கள் தலை மையிலான சுற்றுச்சூழல் குழுக்கள் தூய்மையான நதிகளை உருவாக்குவதற்கான திட்டங்களை முன்னெடுத்து சமூகங்க ளையும், நதிகளையும் பாதுகாக்க உதவ முடியும்.

### நதி மேலாண்மை திட்டங்களின் முக்கியத்துவம்

நதி மேலாண்மை திட்டங்கள் சமூகங்களை பாதுகாப்பதி லும் நதி வளங்களை நிலைத்தன்மையுடன் பயன் படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. நதிகளின் இயற்கை வடிவத்தை(River profiles) மீள நிறுவுதல் போன்ற செயல்பாடுகள் நதியின் ஓட்டநடை(Flow pattern) மற்றும் நடத்தை(River behavior) பற்றி அதிகாரிகளுக்கு தெளிவான புரிதலை வழங்குகிறது. இது வெள்ள மேலாண்மையை மேம்படுத்தி பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கான அபாயங்களை குறைக்க உதவுகிறது. நதிக்கரை பாதுகாப்பு பணிகள் கிராமங்கள், விவசாய நிலங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை கரையரிப்பிலிருந்தும், வெள்ளத் திலிருந்தும் பாதுகாக்கின்றன.

தூய்மையான நதி திட்டங்கள் மாசுபாட்டைக் குறைத்து பல சமூகங்கள் பயன்படுத்தும் நதி நீரின் தரத்தை பாதுகாக்க உதவுகின்றன. மேலும், நதி மேலாண்மை முயற்சிகளின் கீழ் நடைபெறும் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆண்களையும் பெண்களையும் நதிச் சூழலியலை பாதுகாக்க பொறுப்புணர்வுடன் செயல் பட ஊக்குவிக்கின்றன. இந்த ஒருங்கிணைந்த முயற்சி கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மட்டுமல்லாது நதியை சார்ந்த சமூகங்களின் பாதுகாப்பு, நலன் மற்றும் நிலைத் தன்மையையும் உறுதிசெய்கின்றன.

ஆரோக்கியமான நதிகள் ஆரோக்கியமான சமூகங்களை உருவாக்குகின்றன. பயனுள்ள நதி மேலாண் மையானது, பொறியியல் தீர்வுகளை தாண்டி சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் பங்களிப்பையும் உள்ளடக்க வேண்டும். பெண்கள் நதி பாதுகாப்பு, நீரேந்துப் பகுதி பாதுகாப்பு மற்றும் சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகளில் பங்கேற்க வலுவூட்டப்பட்டால், நதி மேலாண்மை மேலும் வலிமையானதாகவும் நிலைத்தன்மையானதாகவும் மாறும். நதி நீரேந்துப் பிரதேச திட்டமிடல்(River basin planning), வெள்ள பாதுகாப்பு மற்றும் நதி பாதுகாப்பு திட்டங்களில் பாலின சமத்துவத்தைப் பேணுவதன் மூலம், எதிர்கால தலைமுறைகளுக்காக நதிகள் நீர், உணவு பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை தொடர்ந்து வழங்க இயலும். நீர் பாதுகாப்பில் பெண்களை வலுப்படுத்துவது பாலின சமத்துவத்திற்கு ஒரு முன்னேற்றம் மட்டுமல்ல, அது நமது நதிகளை பாதுகாத்து உறுதியான நீர்வள எதிர்காலத்தை உருவாக்கும் முக்கியமான படியாகும்.

• • •

தமிழக அகதி ... தொடர்ச்சி...

அவர்கள் ஏற்கனவே சொல்லொணாத் துன்பங் களை அனுபவித்தவர்கள். அவர்களின் கோரிக்கைகளை நாம் மிகுந்த மனிதாபிமானத்துடனும், உணர்வுப்பூர்வமாக வும் கையாள வேண்டும்,” என அமைச்சர் பிமல் ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அகதிகள் நலன் சார்ந்து பிரதமர் மோடிக்கு அண்மையில் எழுதிய கடிதம் குறித்துக் கேட்டபோதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடந்த 16 ஆண்டுகளில் சுமார் 18,500-க்கும் மேற்பட்டோர் தமிழகத்திலிருந்து நாடு திரும்பியுள்ளனர்.

எஞ்சியுள்ளவர்களில் வர விரும்புவோரை வரவே ற்க அரசு காத்திருக்கிறது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள் ளார்.

அகதி முகாம்களில் வசிக்கும் சுமார் 89,000 பேரில் 40 சதவீதமானோர் இந்தியாவிலேயே பிறந்தவர்கள். நீண்டகாலமாக அங்கு படித்து, பணிபுரிந்து அல்லது இந்தியர்களைத் திருமணம் செய்துகொண்டு அங்கேயே குடியுரிமை பெற அவர்கள் விரும்பினால், அந்த உரி மையை நாம் மறுக்க முடியாது. அதுவே அவர்களுக் கான தற்போதைய யதார்த்தமாகும் என்றும் அவர் கூறி யுள்ளார். அத்துடன் கடந்த காலங்களில் முறையான கடவுச்சீட்டு இன்றி நாட்டை விட்டு வெளியேறிய குற்றச்சாட்டின் பேரில், நாடு திரும்பிய வயதான அகதிகள் கைது செய் யப்பட்ட சம்பவங்கள் குறித்து எம்.ஏ.சுமந்திரன் போன்றோர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இது போன்ற மனிதாபிமானச் சிக்கல்களைத் தீர்ப்பதில் அநுர அரசாங்கம் விசேட கவனம் செலுத்தும் என்றும் அவர் உறுதியளித்தார்.

2007-ஆம் ஆண்டிலேயே தமிழக அகதி முகாம்களு க்கு நேரில் சென்று அவர்களுக்குக் குடியுரிமை வழங்க வலியுறுத்திய அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் இந்தக் கருத்துக்கள், அநுர அரசாங்கம் தமிழ் அகதிகள் விவகாரத் தில் கொண்டுள்ள ஆக்கபூர்வமான அணுகுமுறையை வெளிப் படுத்துவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருது கின்றனர்.

ஈரானில் 204... தொடர்ச்சி...

மற்றும் 17 செஞ்சிலுவை மையங்கள் சேதமடைந்துள்ளன. மொத்தத்தில் 70,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் குடி யிருப்புகள் சேதமடைந்துள்ளன.

“அனைத்து சர்வதேச நிறுவனங்களும், குறிப்பாக மனித உரிமைகள் துறையில் செயல்படும் அமைப்புகளும், இந்த அப்பட்டமான மீறல்களுக்கு எதிராக மௌனமாக இருக்கக்கூடாது என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்,” என்று அது கூறியது.



# உலகமும் மனிதர்களும்...

விரிந்திருக்கின்ற இந்த உலக அரங்கிலே எல்லைகளற்ற கனவுகளும் அளவுகடந்த ஆசைகளும் பெருகி ஓடுகின்றன. இந்தக் கனவுகள், ஆசைகள் எல்லாம் மனிதர்களை காலநேர நியமங்களுக்கும் கருத்துப் புரட்சிக்கும் உயர்வுகளுக்கும் உன்னதங்களுக்கும் நன்மைகளுக்கும் நலன்களுக்கும் இட்டுச் செல்கிறதா என்றால் அது சற்று யோசிக்க வேண்டிய ஒன்றாகவே உள்ளது.

ஒவ்வொரு யுகங்களும் மனிதர்களை அடையாளப் படுத்துகிறதென்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயமே.. ஒவ்வொரு நூற்றாண்டுகள் ஒவ்வொரு மனிதர்களை இந்த உலகத்தின் நாயகர்களாக காண்பித்துச் செல்கின்றன.. அவ்வாறு காண்பிக்கப்பட்டவர்களில் சிவப்புச் சிந்தனைக் காரன் கார்ல் மார்க்ஸ், பாட்டுப் புலவன் , பாரதி, கவிக்கிழவி ஔவையார், எங்கள் இனத்தின் அடையாளமான மேதகு என, பலரைப் பட்டியலிட முடியும். இப்படி காண்பிக்கப்படும் மனிதர்கள் சமூகச்சிந்தனை, சமுதாய அக்கறை, அறிவு, ஆளுமை,தெளிவு, ஒற்றுமை, இப்படி நற்குணங்கள் பொருந்திய கனத்துக்குரியவர்களாகவே இருப்பார்கள். இது நாம் கண்கூடாக கண்டு கடக்கிற விடயமேயாகும்.



மனிதர்கள் மகத்துவமானவர்களாகிற இந்த வாழ்வியல் சூட்சுமத்தையே நானும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன், அது உங்களையும் என்னையும் இறுக்கிப் பிணைக்கிற ஒரு தத்துவார்த்த நிலையாகவே இருக்கும். அந்தப் பிணைப்பு உங்களுக்கும் எனக்கும் பல மனமாற்றங்களைத் தரவல்லது, இணைந்து பயணிப்பதன் அர்த்தத்தை உணர்த்தவல்லது. வாருங்கள் அது பற்றிப் பார்ப்போம்.

**உலகத்தின் அதிகாரப்போக்கு**

மேற்கூறப்பட்ட மனிதர்கள் எல்லோரும் கூறிய விடயம் என்ன? இவர்களும் சாதாரண மனிதர்கள் தான். ஆனால் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை என்பது தனித்துவமானது. இன்பதுன்பங்களை அளவாகவும் அழகாகவும் ஏற்றுக்கொண்டு பயணித்தவர்கள். தங்களுடைய வாழ்க்கைக்கு அவர்கள் வகுத்துக்கொண்ட நீதிநெறியே அவர்களைத் தனித்து தெரியவும் உதாரண புருசர்களாக மிளிரவும் செய்தது.மிக முக்கியமாக மற்றவர்களுக்காக அவர்கள் சிந்தித்தார்கள்.

அது மட்டுமல்ல, வாழ்க்கை எனும் பெரும் பெட்டகத்தை ஒரு குறுகிய நிலையில் நின்று அல்லாது விரிந்த நேர்த்தியான பார்வையோடு நோக்கிச் செல்லும் உத்திகளையே இவர்கள் எங்களுக்குச் சொல்லியுள்ளனர். ஆனால் மனிதர்கள் அவ்வாறு நடந்து கொள்கின்றனரா என்றால் இல்லவே இல்லை.

இனமும் மொழியும் எங்களோடு பின்னிப் பிணைந்துள்ள இரகசியத்தையும் இவற்றுக்காக நாங்கள் பயணப்பட வேண்டிய கட்டாயத்தையும் பேதங்கள் அற்ற வாழ்க்கைக்கான தரும நெறியையும் அவர்கள் தான் எமக்கு கூறியுள்ளனர். மனிதர்கள் மற்றவர்கள் மீது அக்கறை கொள்வதையும் அன்பு காட்டுவதையும் நடைமுறைப் பழக்கங்களையும் அறமாக வகுத்தது எமது இனமே.

## கோபிகை

எமது வாழ்க்கை நிலையை மட்டும் எடுத்து நோக்காது, உலகளவில் நோக்கினால், போரும் மனித ஓலமும்தான் அவனியில் மலிந்து போயிருக்கிறது. பட்டினிக் கொடுமையால் மண்ணை அள்ளி உண்ணுகிற அவலம் நேர்ந்திருக்கிறது. மனித இனம் அவதியுற்று வாழ்வும் சாவுமாக அல்லாடுகிற நிலைமை உருவாகியிருக்கிறது. இவை எல்லாம் எதனால் உண்டானது என்று சிந்தித்தால் ஒரு விடயம் தெளிவாகப் புலப்படும்.



மனிதர்கள் மீது மனிதர்கள் கொண்டிருக்கிற வெறுப்பு இத்தகைய நிலைமையை உருவாக்கியுள்ளது. தீக்கங்குகளால் சாமரம் வீசுகிற மனநிலையே இதுவாகும். இது மாற்றப்பட வேண்டும், இல்லையேல் எரிதழலின் சிறகுகளில் சிறு குருவிகள் சாம்பலாகிவிடும் என்பதே நிதர்சனம்.

**வாழ்க்கையின் ஆழ்நிலை**

வாழ்க்கை உண்மையில் அழகானதும் அமைதியானதுமே ஆகும். அதன் வேர்களும் கிளைகளும் பூக்களும் காய்களும் கனிகளும் இரசனைக்கு உரியவையே. மானுடர்கள் தம்மை மட்டுமல்லாது சக மன்தர்களையும் ஏனைய உயிரிகளையும் கூட நேசிக்க வேண்டும். அவற்றுக்கும் வாழ்க்கை உண்டேன்பதை உணர வேண்டும். அடக்கியாளுவதும் அடிமைப்படுத்துவதும் அக தர்மமற்ற செயல் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எங்களுடைய இனம், தனி உரிமைக்காக ஓர்மத்துடன் எழுந்து நின்ற போது, அதன் நகர்வுகள் சிலரால் வளர்க்கப்பட்டதுடன் பலரால் சரிக்கப்பட்டது. ஒரு கடற்கரையின் ஓரத்திலே அபலைகளாக, நிர்வாணிகளாக, மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்டவர்களாக நின்ற போது, உலகம் சற்றேனும் இரக்கம் காட்டவில்லை, ஒரு இனம் ஏன் தன்னுரிமை கேட்கிறது என்று சற்றும் சிந்திக்கவில்லை, விளைவு நாம் யாவரும் அறிந்ததே ஆகும். எங்களைப்போல பல இனங்கள் இன்றும் போராடுகின்றன, ஆனால் அவை எட்டவேண்டிய செவிகளுக்கு கேட்பதேயில்லை.

**அகத்திரட்சி.**

அகத்திரட்சி என்பது சுய உணர்திறனுடன் சரியாகவும் நியாய வழியிலும் உண்டாகும் போது, மனித சமூகம் ஒரு மகிழ்ச்சியைப் பெறும். அந்த மகிழ்ச்சியானது, , மாற்று உலகம் ஒன்றைக் கையளிக்கும். இது எப்போது சாத்தியமாகும் என்பது விடை தெரியாத ஒரு வினாவாகும்.

அன்பு, ஒற்றுமை, என்பவற்றை முன்னிறுத்தி, அறவழியில் உலகமும் உலக மனிநர்களும் சிந்திப்பார்களேயானால் தேசம் விடிவைக்காணும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல, வெளிப்படையாகத் தெரிந்த விடயமாகும். நல்லதொரு உலகினைக்காண நாமும் இயன்றவரை பயணிப்போம்

• • •

## இந்தோ-பசுபிக் ... தொடர்ச்சி...

அதேவேளை, அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான சிறப்புத் தூதுவரும் இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவருமான செர்ஜியோ கோர் தற்போது இலங்கைக்கு 'நல்லெண்ண' விஜயத்தை மேற் கொண்டுள்ளார்.

அவர் ஜனாதிபதி அநுரவுடன் நடத்திய சந்திப்பின் மறுநாள் தான் அமெரிக்க விமானங்கள் தரையிறங்கும் அனுமதி விவகாரத்தினை அநுர வெளிப்படுத்தியுள்ளார்.

அநுர குறித்த விடயத்தினை வெளிப்படுத்திக் கொண்டிருக் கையில் அமெரிக்க விசேட பிரதிநிதி கோர் இலங்கையின் பாதுகாப்புத் தரப்பினருடன் மூடிய அறைக்குள் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்ததோடு அதன் முடிவில் 'எஸ்.எல்.என்.எஸ். கஜபாகு' கப்பலில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.

இந்தச் செயற்பாடுகள் இலங்கையின் பாதுகாப்பு கட்டமைப்பை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர எடுக்கும் முயற்சிகளின் பகுதிகளாhகும். குறிப்பாக, தெற்காசியாவிற்கான டொனால்ட் ட்ரம்ப்பின் பிரதிநிதியாகக் கருதப்படும் செர்ஜியோ கோரின் வருகை, இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிலைநாட்ட இலங்கையை பகடைக்காயாகப் பயன்படுத்துவதையே உறுதிப்படுத்துகிறது.

இதேவேளை, எந்தவிதமான ஆர்ப்பாட்டங்களுமின்றி, அமெரிக்காவின் வெள்ளைமாளிகை புலனாய்வுத் துறைக்கு பொறுப்பான மைக்கல் ஜெரீனா இலங்கைக்காக விஜயமொன்றை மேற்கொண்டு திரும்பியிருக்கிறார்.

இவரது விஜயம் சம்பந்தமாக எந்தவிதமான தகவல்க ளும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் அவர் ஜனாதிபதி அநுர உள்ளிட்ட உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்துள்ளார் என்பது மட்டும் தற்போதைக்கு உறுதியான விடயம்.

இலங்கை அரசாங்கம் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி, அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் கோரிக்கைகளுக்கு மறைமுகமாக இணங்கிச் செல்கிறது. இது ஜே.ஆர்.ஜயவர்தன காலத்தில் காணப்பட்டதைப் போன்றதொரு மேற்கத்தேயச் சார்பு நிலையையே மீண்டும் நினைவுபடுத்துகிறது.

இலங்கை மீண்டும் ஒருமுறை வல்லரசுகளின் பனிப்போருக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஒருபுறம் ஈரானுடனான எரிபொருள் மற்றும் இராஜதந்திர உறவுகள், மறுபுறம் அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் நிதி அழுத்தங்களென இலங்கை இரண்டு தலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கிறது.

மாலுமிகளை விடுவிக்காமல் இழுத்தடிப்பது, கப்பலை நகர்த்தத் தயங்குவது மற்றும் அமெரிக்கத் தூதுவர்களின் தொடர்ச்சியான வருகைகள் என்பன இலங்கையின் 'அணிசேராக் கொள்கை' என்பது வெறும் காகிதத்தோடு முடிந்துவிட்டது என்பதை நிரூபிக்கின்றன.

அமெரிக்கப் போர் விமானங்கள் தரையிறங்க அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறினாலும், கடற்பரப்பில் அமெரிக்காவின் அத்துமீறல்களைத் தடுக்கவோ அல்லது கேள்வி கேட்கவோ முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதே கசப்பான உண்மையாகும்.

இறுதியில், அமெரிக்கா விரித்துள்ள இந்த இந்தோ-பசுபிக் வலையில் இலங்கை மிக மோசமாகச் சிக்கியுள்ளது. இந்தச் சிக்கலில் இருந்து விடுபடத் தேவையான துணிச்சலான இராஜதந்திரம் தற்போதைய ஆட்சியாளர்களிடம் இருக்கிறதா என்பது கேள்விக்குறியே. ஈரானிய கடற்படையினரின் கண்ணீரும், நடுக்கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களும் இலங்கையின் இறையாண்மையின் மீது விழுந்த பெரும் வடுக்களாகவே வரலாற்றில் நிலைத்திருக்கும்.

இவ்வாறான நிலையில், சர்வதேச ரீதியில் ஒரு கௌரவமான இடத்தைப் பிடிப்பதற்குப் பதிலாக, வல்லரசுகளின் தேவைகளுக்காகத் தனது கொள்கைகளை வளைத்துக் கொடுக்கும் ஒரு நாடாக இலங்கை மாறிவருவது கவலைக்குரிய விடயமாகும்.

அமெரிக்க அழுத்தங்களுக்குப் பணிந்து ஈரானியர்களைத் தடுத்து வைத்திருப்பது, எதிர்காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளுடனான இலங்கையின் உறவில் பாரிய விரிசல்களை ஏற்படுத்தக்கூடும்.

அமெரிக்கா வழங்கும் கடல்சார் பாதுகாப்பு என்பது உண்மையில் இலங்கையைப் பாதுகாப்பதற்கா அல்லது அமெரிக்காவின் பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதற்கா என்பதை அரசாங்கம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

வெளிப்படையாக நடுநிலை என்று கூறிக்கொண்டு, திரைக்குப் பின்னால் அமெரிக்காவின் விருப்பங்களுக்கு ஏற்பச் செயற்படுவது இலங்கையை மீண்டுமொரு சர்வதேச நெருக்கடிக்குள் தள்ளிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையில் தான் தனியார் தொலைக்காட்சிக்கு செவ்வியொன்றை வழங்கியுள்ள டெல்லியில் உள்ள இந்தியாவுக்கான இஸ்ரேலிய தூதர் ரூவன் அசார் மத்திய கிழக்கு போரில் இலங்கை யாருடன் நட்பு பாராட்ட வேண்டுமென்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

• • •



# QR குறியீட்டுக்குள் சிக்கும் 1750 : ஜனாதிபதி – மனோ கணேசன் சந்திப்பு தீர்வு தருமா?

மருதன் ராம்

இலங்கையின் அந்நியச் செலாவணி வருவாயில் தேயிலை மற்றும் ரப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்கள் மிக முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. குறிப்பாக, மலையகத் தொழிலாளர்களின் உழைப்பில் தங்கியுள்ள இத்துறை, கடந்த சில வருடங்களாகப் பொருளாதார நெருக்கடிகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் மற்றும் உள்நாட்டு எரிபொருள் விநியோகக் கட்டுப்பாடுகள், இத்துறையை மீள முடியாத ஒரு சரிவை நோக்கித் தள்ளும் அச்சம் உருவாகியுள்ளது.




மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் காரணமாக உலக சந்தையில் எரிபொருள் விநியோகம் சீர்குலைந்துள்ளது. இதன் நேரடி விளைவாக, இலங்கையில் எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள QR குறியீட்டு முறைமை பொதுவான நுகர்வைக் கட்டுப்படுத்த உதவினாலும், பாரிய இயந்திரங்களை இயக்கும் தோட்டத் துறைக்கு இது போதுமானதாக இல்லை. தொழிற்துறை ரீதியான பாதிப்புகள் உள்ளதாக பெருந்தோட்ட நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக தேயிலைத் தோட்டங்கள் மலைப் பாங்கான பகுதிகளில் அமைந்துள்ளதால், பறிக்கப்படும் கொழுந்துகளை தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்ல வாகனங்கள் அத்தியாவசியமானவை. எரிபொருள் தட்டுப்பாட்டினால் கொழுந்து கொண்டு செல்லப்படுவது தாமதமடையும் போது, தேயிலையின் தரம் குறைந்து சந்தை மதிப்பை இழக்க நேரிடுகிறது.

அதேநேரம் பெரும்பாலான தேயிலைத் தொழிற்சாலைகள் உலர்த்துதல் மற்றும் அரைத்தல் போன்ற பணிகளுக்கு டீசல் மற்றும் மின்சாரத்தையே நம்பியுள்ளன. மின்சாரத் தடையின் போது எரிபொருள் இல்லையெனில் முழு உற்பத்திச் சங்கிலியும் முடங்கிவிடும். தோட்டங்களுக்குத் தேவையான உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவற்றைக் கொண்டு செல்வதற்கும் எரிபொருள் அவசியமாகும்.

இது தவிர பெருந்தோட்ட தொழில் துறையில் முதுகெலும்பாக திகழும் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்திலும் தாக்கங்கள் ஏற்படக்கூடும் என்ற அச்சம் உருவாகியுள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் என்பது நேரடியான உழைப்புடன் மாத்திரமன்றி, தோட்டத்தின் வருமானத்துடனும் பிணைக்கப்பட்டுள்ளது. அண்மையில் அரசாங்கமும் பெருந்தோட்ட நிறுவனங்களும் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1750 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.



400 ரூபாவால் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் 200 ரூபாய் அரசாங்கத்தின் வரவு செலவு கொடுப்பனவும் பெருந்தோட்ட நிறுவனங்களின் சார்பில் வருகைக்கான கொடுப்பனவாக 200 ரூபாவும் என்ற அடிப்படையில் இணக்கப்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில் உற்பத்திச் செலவு அதிகரிப்பதாலும், போக்குவரத்து முடக்கத்தாலும் தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு வழங்கும் வேலை நாட்களைக் குறைக்கும் அச்சம் நிலவுகிறது. இது தொழிலாளர்களின் மாத வருமானத்தைப் பெருமளவு பாதிக்கிறது.



அரசு நிறுவனங்களில் ஒவ்வொரு புதன்கிழமையும் விடுமுறை தினமாக அறிவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் தற்போது நாளாந்தம் தொழிலில் ஈடுபட்டு வரு கின்றனர். எவ்வாறாயினும் தற்போதைய எரிபொருள் கட்டுப்பாடு

தொடர்ச்சி: பக்கம் 13




# வளைகுடா யுத்தமும் இந்தியா எதிர் நோக்கியுள்ள சவால்களும்

## இலக்கின் ஆய்வுக் கட்டுரை

2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் தேதி தொடங்கிய ஈரான் மீதான இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் ஒருங்கிணைந்த இராணுவ நடவடிக்கைகள், 21ஆம் நூற்றாண்டின் மிக முக்கியமான புவிசார் அரசியல் நிகழ்வாக உருவெடுத்துள்ளது. பெப்ரவரி மாத இறுதியில் தொடங்கிய இந்த மோதல், ஒரு முழுமையான பிராந்தியப் போராக உருவெடுத்து, உலகளாவிய எரிசக்தி சந்தைகள், கடல்சார் வர்த்தகப் பாதைகள் மற்றும் பன்னாட்டு இராஜதந்திர உறவுகளைத் தலைகீழாக மாற்றியுள்ளது.



2026 பெப்ரவரி 28 அன்று இஸ்ரேல் மற்றும் அமெரிக்கப்படைகள் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மற்றும் ஏவுகணைத் தளங்கள் மீது நடத்திய வான்வழித் தாக்குதல்கள் இப்போர் தொடங்குவதற்கான உடனடி காரணங்களாக அமைந்தன. இந்தத் தாக்குதல்கள் ஈரானின் மூலோபாயத்திறன்களை முடக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், அதன் விளைவுகள் ஒட்டுமொத்த மேற்கு ஆசியாவையும் ஒருபாதுகாப்பற்ற சூழலுக்குள் தள்ளின.



இராணுவ ரீதியாக இப்போர் பல முக்கிய திருப்பு முனைகளைக் கண்டுள்ளது. பிப்ரவரி 28-ல் தாக்குதல்கள் தொடங்கிய நிலையில், அடுத்த நாளே ஈரான் ஹார்முஸ் நீரிணையை முடக்கியது. இது உலகளாவிய விநியோகச் சங்கிலியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. மார்ச் 4-ல் அமெரிக்கா இந்தியப் பெருங்கடலில் ஈரானின் ‘ஐஆர்ஐஎஸ் தேனா’ கப்பலை மூழ்கடித்தது. மார்ச் 11 முதல் 17 வரையிலான காலகட்டத்தில் ஈரானிய உளவுத்துறைஅமைச்சர் இஸ்மாயில் காதிப் மற்றும் தேசிய பாதுகாப்புத்தலைவர் அலி லாரிஜானி உட்பட பல உயர்மட்டத் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மார்ச் 18 மற்றும் 19 தேதிகளில் இஸ்ரேல் ஈரானின் தெற்கு பார்ஸ் எரிவாயு வயல்களைத் தாக்கியதற்குப் பதிலடியாக, ஈரான் கட்டாரின் ராஸ் லாஃபான் எரிவாயு ஆலை மற்றும் ஐக்கிய அரபு அமீரகக் கப்பல்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

ஈரானின் உயர்மட்டத் தலைமை இலக்கு வைக்கப் பட்ட விதம், அந்த நாட்டின் ஆட்சி அதிகார மையத்தைச் சிதைக்கும் நோக்கம் கொண்டதாகத் தெரிகிறது. குறிப்பாக, ஈரானின்உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி மற்றும் அவரது குடும்பத்தினர் மீதான தாக்குதல்கள் ஈரானிய பாதுகாப்பு அமைப்புகளுக்குள் பெரும் அதிர்ச்சியையும் பரனோயாவையும்(Paranoia) ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய “தலை துண்டித்தல்” (Decapitation) நடவடிக்கைகள் ஈரானின் பதில் தாக்குதல் திறனை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மட்டுப்படுத்தினாலும், ஈரான் தனது ஏவுகணை மற்றும் ட்ரோன் (Drone) தொழில்நுட்பங்கள் மூலம் அண்டை நாடுகளின் எரிசக்திநிலையங்களைத் தாக்குவதன் மூலம் பதிலடி கொடுத்து வருகிறது.



மார்ச் 18 மற்றும் 19 தேதிகளில் நடந்த தாக்குதல்கள் மேற்குஆசியப் போரை ஒரு “எரிசக்தி யுத்தமாக” (Energy War) மாற்றியுள்ளன. ஈரான் மற்றும் கட்டார் நாடுகளால் கூட்டாகப் பகிரப்படும் உலகின் மிகப்பெரிய இயற்கை எரிவாயு வயலான தெற்கு பார்ஸ் (South Pars) மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல், ஈரானின் பொருளாதார முதுகெலும்பைத் தகர்க்கும் நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது. ஈரானின் மின்சாரஉற்பத்தியில் 90%-க்கும் மேலாக எரிவாயுவைச் சார்ந்திருக்கும் நிலையில், இந்தத் தாக்குதலால் அந்த நாட்டின் எரிவாயு சுத்திகரிப்பு திறனில் ஐந்தில் ஒரு பங்கு (20%) சேதமடைந்துள்ளது. இதற்குப் பதிலடியாக ஈரான் தனது வளைகுடா அண்டைநாடுகளின் எரிசக்தி கட்டமைப்புகளைத் தாக்கியுள்ளது.குறிப்பாக, மார்ச் 19 அன்று கட்டாரின் ராஸ் லாஃபான் (Ras Laffan) திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) ஆலைமீது ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல், உலகளாவிய எரிசக்தி விலைகளில் பெரும் ஏற்றத்தை ஏற்படுத்தியது. இந்தச் சூழலில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் விடுத்துள்ள எச்சரிக்கை மிகவும் முக்கியமானது. ஈரான் தொடர்ந்து கட்டாரைத் தாக்கினால், ஈரானின் ஒட்டுமொத்த தெற்கு பார்ஸ் எரிவாயு வயலையும் அமெரிக்கா முற்றிலும்அழித்துவிடும் என்று அவர் மார்ச் 19 அன்று அறிவித்தார்.

இந்த எரிசக்திப் போரின் விளைவாக, கச்சா எண்ணெய் விலை பேரல் ஒன்றுக்கு110 முதல் 120 டொலர் வரை உயர்ந்தது. இது இந்தியா போன்ற எரிசக்தி இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நாடுகளுக்குப் பெரும் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (GCC) நாடுகள் இந்தப்போரில் ஈரானின் நேரடித் தாக்குதலுக்கு உள்ளாகும் அதே வேளையில், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் நடவடிக்கைகளால் தங்களது பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாவதைக் கண்டு கவலையடைந்துள்ளன.

சவுதிஅரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கட்டார், ஓமான், குவைத் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் ஈரானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களைக் கடுமையாகக் கண்டித்துள்ளன. சவுதிஅரேபியா ஈரானுடனான தனது நம்பிக்கை முற்றிலும் சிதைந்து விட்டதாக அறிவித்ததோடு, தற்காப்புநடவடிக்கைகளை எடுக்கும் உரிமை யையும் வலியுறுத்தி உள்ளது. ஐக்கிய அரபு அமீரகம் தனது வான்வெளியைப் பாதுகாப்பதில் தீவிர கவனம் செலுத்துவதோடு, அமெரிக்காவிற்குத் தளம் அமைத்துக் கொடுத்ததாக ஈரான் முன்வைத்த குற்றச்சாட்டை மறுத்துள்ளது. கட்டார் தனது முக்கிய எரிவாயு நிலையங்கள் தாக்கப்பட்டதால் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ள நிலையில் ஓமான் தொடர்ந்து அமைதிப்பேச்சுவார்த்தைகளுக்கு முயன்று வருகிறது.

வளைகுடாப் பகுதியில் நிலவும் இந்தச் சூழல் “கலப்புப் போர்” (Hybrid Warfare) நிலைக்கு மாறியுள்ளது. நேரடி ஏவுகணைத் தாக்குதல்களுக்கு இணையாக, நிதி நிறுவனங்கள் மற்றும்எரிசக்தி வலைப்பின்னல்கள் மீது சைபர் தாக்குதல்கள் நடத்தப்படுவது இப்பகுதியின் பாதுகாப்பை மேலும்சிக்கலாக்கியுள்ளது. இந்தியா மேற்கு ஆசிய நெருக்கடியை மிகவும் கவனமாகவும், தனது தேசிய நலன்களை முன்னிறுத்தியும் கையாண்டுவருகிறது. இந்தியாவின் அணுகுமுறை “மூலோபாய சுயாட்சி” (Strategic Autonomy) மற்றும் “பல்முனை அணிசேர்ப்பு” (Multi-alignment) ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒருபுறம் இஸ்ரேல் மற்றும்அமெரிக்காவுடனான பாதுகாப்பு உறவுகளையும், மறுபுறம்வளைகுடா நாடுகள் மற்றும் ஈரானுடனான எரிசக்தி மற்றும் வர்த்தக உறவுகளையும் சமநிலைப்படுத்த இந்தியா முயல்கிறது.



வளைகுடா நாடுகளில் வசிக்கும் சுமார் ஒரு கோடி (10 மில்லியன்) இந்தியர்களைப் பாதுகாப்பதிலும் ,இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியில் 50 சதவீதமும், எல்பிஜி இறக்குமதியில் 90 சதவீதமும் இந்தப் பகுதியிலிருந்தே வருவதால் நாட்டின் எரிசக்தியை பாதுகாப்பதிலும், ஹார்முஸ் நீரிணை போன்ற முக்கியமான கடல்சார் வர்த்தகப் பாதைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் இந்தியா கவனம் செலுத்தி வருகிறது.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் ஈரானுக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா வழிமொழிந்தது. ஈரானின் நடவடிக்கைகளால் இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு பாதிக்கப்படுவதை இந்தியா ஏற்காது என்பதற்கான தெளிவான செய்தியாகப் பார்க்கப்படுகிறது. இருப்பினும், இஸ்ரேல் அல்லது அமெரிக்கா ஈரானுக்குள் நடத்திய தாக்குதல்களை இந்தியா நேரடியாகக் கண்டிக்காமல் மௌனம் காப்பது, இஸ்ரேலுடனான அதன் ஆழமான பாதுகாப்பு உறவுகளைப்பிரதிபலிக்கிறது. பிரதமர் நரேந்திர

தொடர்ச்சி: பக்கம் 14

# வல்லரசுகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் சமச்சீரற்ற போர்முறை



படைத்துறை ஆய்வாளர்
**ரியோ டி ஜெனிரேர்**
பிரேசில்



## நேர்காணல்

**கேள்வி:**

**ஹோர்முஸ் ஜலசந்தி குறித்த உங்கள் ஆய்வில், ஈரானின் புவியியல் மற்றும் இராணுவ நிலைப்பாடு தற்போதைய அமைப்பில் அந்த ஜலசந்தியை கிட்டத்தட்ட ஊடுருவ முடியாததாக ஆக்குகிறது என்று வாதிடுகிறீர்கள். முற்றிலும் இராணுவக் கண்ணோட்டத்தில், இந்த நெருக்கடிப் புள்ளியில் ஈரானுக்கு இத்தகைய சாதகத்தை வழங்கும் குறிப்பிட்ட திறன்கள், அதாவது ஏவுகணைகள், கண்ணிவெடிகள், ட்ரோன்கள் அல்லது நிலப்பரப்பு அனுகூலங்கள் யாவை?**

**பதில்:**

முதலில் முன்னிலைப்படுத்த வேண்டிய விஷயம், உள்ளூர் புவியியல் மற்றும் அதை ஈரான் எவ்வளவு திறம்படப் பயன்படுத்துகிறது என்பதுதான். ஈரானியப் பக்கத்திலிருந்து ஹோர்முஸ் ஜலசந்தியின் புகைப்படத்தைப் பார்த்தால், அந்த ஜலசந்தி மலைகளால் சூழப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். இதனுடன், ஆழ அளவீட்டுத் தரவுகள் சராசரியாக 50-70 மீட்டர் ஆழத்தைக் காட்டுகின்றன. இது பெரிய கப்பல்களையும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் மிகவும் எளிதில் தாக்கக்கூடியதாக ஆக்குகிறது, அதே நேரத்தில் ஈரானிய குட்டி நீர்மூழ்கிக் கப்பல்கள், அதிவேகத் தாக்குதல் படகுகள் (FACs), கண்ணிவெடிகள், ஆளில்லா மேற்பரப்புக் கப்பல்கள் (USVs) மற்றும் ஆளில்லா நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு (UUVs) சாதகமாக அமைகிறது. ஈரானின் ஆயுதக் களஞ்சியம் இந்த வகை போருக்காகவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதாவது, சிறிய நீர்மூழ்கிக் கப்பல்கள், ஏவுகணைகள் பொருத்தப்பட்ட அதிவேகப் படகுகள், மேற்பரப்பு ட்ரோன்கள், நீருக்கடியில் இயங்கும் ட்ரோன்கள் மற்றும் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்தி ஜலசந்தியில் எதிரிகளைப் பதுங்கித் தாக்குவது. குறிப்பாக நீருக்கடியில் இயங்கும் ட்ரோன்களைப் பொறுத்தவரை, லித்தியம் பேட்டரிகளால் இயங்கும் மற்றும் அஸ்தார் போன்ற அதிக மறைந்திருந்து தாக்கும் திறன்களைக் கொண்ட, 8 மீட்டர் நீளம் வரையிலான நவீன ட்ரோன்களைப் பற்றிப் பேசுகிறோம்.



கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும், நவீன சுல்பிகார் வகைப் படகுகளில் காணப்படும் கதிர் ஏவுகணைகள் போன்ற, 25 முதல் 300 கி.மீ. வரையிலான தூரவீச்சுஏவுகணைகள் பொருத்தப்பட்ட 250 முதல் 300 வரையிலான அதிவேகப் படகுகளை பாரசீகர்கள் பணியில் அமர்த்தியுள்ளனர். மேலும், ஈரான் ஏற்கனவே ஜலசந்தியில் கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டதாகத் தெரிகிறது; இதனால், தனது சொந்தப் பகுதிக்கு அருகில் ஒரு குறுகிய பாதை மட்டுமே எஞ்சியுள்ளது. இது, அவ்வழியே செல்லும் எந்தவொரு கப்பலையும் மிகவும் எளிதில் தாக்கக்கூடியதாக ஆக்குகிறது.

தமிழில்: **ஆர்தீகன்**

இந்த ஏவுகணை மற்றும் ட்ரோன் நிலைகளில் பல, ஜலசந்தியின் இருபுறமும் உள்ள மலைத்தொடர்களுக்குள் பதிக்கப்பட்ட ‘மினி-பங்கர்களில்’ அமைந்துள்ளன. மேலே விவரிக்கப்பட்ட அனைத்தும் வான்வழி ட்ரோன்கள் மற்றும் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளால் தாக்கப்படுவதை கற்பனை செய்து பாருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, ஜனவரி 2026ல், அதிவேகப் படகுகளையும் கடற்படை ட்ரோன்களையும் நிலைநிறுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட கடலடி ஏவுகணை சுரங்கங்கள் மற்றும் கடலோரத் தளங்களின் வலையமைப்பை IRGCN வெளிப்படுத்தியது. எந்தவொரு நாடும் அந்த ஜலசந்திக்குள் வலுக்கட்டாயமாக நுழையும் என்று நான் நம்பவில்லை.



**கேள்வி:**

**ஈரான் தொடர்ந்து எண்ணெய் ஏற்றுமதி செய்து உலகளாவிய சந்தைகளில் செல்வாக்கு செலுத்தும் அதே வேளையில், மோதலின் வேகத்தை நிர்ணயிக்க முடிந்துள்ளது என்று கூறுகிறது. ஹோர்முஸ் ஜலசந்தியை முழுமையாக மூடாமல், எரிசக்தி சந்தைகளில் உள்ள நிச்சயமற்ற தன்மையை ஆயுதமாக்குவதற்காக தெஹ்ரான் வேண்டுமென்றே பதற்றத்தை அதிகரித்து வருவதாக நீங்கள் நம்புகிறீர்களா?**

**பதில்:**

ஆம், அவர்கள் அதை ஒரு நீண்டகால தேய்வுப் போருக்குத் திட்டமிட்டு, மூலோபாய ரீதியாகச் செய்கிறார்கள். சந்தை ஏற்ற இறக்கங்கள் மற்றும் உயர்ந்து வரும் எண்ணெய் விலைகளால், ஈரான் டிரம்ப் மீது அரசியல் அழுத்தத்தை அதிகரித்து வருகிறது. அதே சமயம், பில்லியன் கணக்கான இழப்புகளைச் சந்தித்து, எரிசக்தித் துறை முடங்கியுள்ள வளைகுடா நாடுகளிடமிருந்தும் டிரம்ப் எதிர்ப்பைச் சந்தித்து வருகிறார்.



கத்தார் எனர்ஜி போன்ற நிறுவனங்கள் திரவ இயற்கை எரிவாயு (LNG) உற்பத்தியை முற்றிலுமாக நிறுத்திவிட்டன; அராம்கோ பாதித் திறனில் இயங்குகிறது; அபுதாபியின் ADNOC தனது செயல்பாடுகளைக் கணிசமாகக் குறைத்துள்ளது. ஈரானிய அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து, வளைகுடாப் பகுதிகளில் தங்கள் இருப்பைக் குறைத்துள்ள பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிதித் துறையைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. பாரசீகர்கள் தங்கள் எதிரிகளுக்கு எதிராக, வெளிப்புற மற்றும் உள் அரசியல்-பொருளாதார அழுத்தங்களைக் கொண்ட ஒரு சமச்சீரற்ற போரை நடத்தி வருகின்றனர்; இதில் அவர்களின் வெற்றி வெளிப்படையாகத் தெரிகிறது. அவர்கள், உருவாகியுள்ள குழப்பத்தைச் சமாளித்து, மற்றொரு முக்கிய மூலோபாயப் பகுதியான பாப் அல்-மண்டேப்பை ஹூதிகள் மூலம் மூடுவதாக அறிவிக்கத் தங்கள் நேரத்திற்காகக் காத்திருக்கின்றனர்.

**கேள்வி:**

**அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் ஒரு கடற்படைக் கூட்டணியுடன் ஹோர்முஸ் ஜலசந்தியை வலுக்கட்டாயமாகத் திறக்க முயற்சித்தால், அத்தகைய நடவடிக்கையின் முதல் 48 மணி நேரத்தில் யதார்த்தமாக என்ன நடக்கும்?**

**பதில்:**

ஈரானியத் தாக்குதல் நிலைகளை ஒடுக்குவதற்காக ஜலசந்தியின் மலைகள் மீது கடுமையான குண்டுவீச்சு நடத்தப்படுவதை நாம் காணக்கூடும், ஆனால் கடலில் பரவலான பீதியும் ஏற்படும், படைகள் பின்வாங்குவார்கள் மற்றும் கப்பல்கள் மூழ்கும். இதுதான் நான் கணிக்கும் காட்சி; எந்தவொரு தளபதியும், குறிப்பாக முழுமையான வான் ஆதிக்கம் அல்லது நீர்மூழ்கிக் கப்பல் ஆதரவு இல்லாமல், அந்த ஜலசந்தியில் தங்கள் கப்பலை ஆபத்தில் ஆழ்த்துவார்

**தொடர்ச்சி: பக்கம் 15**



# அமெரிக்க வான்படையின் நவீன விமானம் வீழ்ந்தது எப்படி?


ஈரான் படையினர் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படையினருக்கு ஒவ்வொரு போரில் எதிர்பாராத திருப்பங்களை ஒவ்வொரு வாரமும் கொடுத்து வருகின்றனர். வியாழக்கிழமை(19) இஸ்ரேலின் மிக முக்கிய எண்ணைசுத்திகரிப்பு நிலையத்தை ஹைபா பகுதியில் தாக்கிய பின்னர் அமெரிக்காவின் முன்னனி மற்றும் ஐந்தாம் தலைமுறை விமானம் ஈரானின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.



அதாவது அமெரிக்க - இஸ்ரேல் கூட்டணிப் படைகளை விட மிகவும் நேர்த்திய திட்டமிடப்பட்ட போரியல் வியூகங்களைக் கொண்ட ஒரு போரை ஈரான் நடத்தி வருவதுபோலவே தோன்றுகின்றது. அது தற்போது தனது வான்பாதுகாப்புக்களை நிலைநிறுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

மத்திய ஈரானின் வான்பரப்பில் பறந்துகொண்டிருந்த அமெரிக்க ஆயுதப் படைகளின் F-35 ஐந்தாம் தலைமுறைப் போர் விமானம் மீது ஈரானிய இஸ்லாமியப் புரட்சிகரக் காவலர் படை ஒரு வெற்றிகரமான தாக்குதலை நடத்தியது உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, AD-08 என்றும் அழைக்கப்படும் மஜித் குறுகிய தூர வான் பாதுகாப்பு அமைப்பே இதற்குக் காரணம் என்று பல ஆதாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தாக்குதல் அமெரிக்க - இஸ்ரேல் வான் படையினரின் உடனடியான வான் தாக்குதல்களில் குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்தலாம். மேலும், ஈரானின் உட்பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்குதல்களைத் தொடுப்பதற்காக ஸ்டெல்த் விமானங்களைப் பயன்படுத்தும் அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய முயற்சிகளை இது குறைக்கக்கூடும். தற்போதைய மோதலுக்கு அப்பால், சீனாவிற்கு வெளியே உலகின் மிகப்பெரிய போர் விமானத் திட்டமாக F-35 திட்டம் விளங்குவதால், இந்த விமானங்களில் ஒன்றின் மீது முதன்முறையாக வெற்றிகரமாக நடத்தப்பட்ட தரை-வான் தாக்குதல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.



இந்த தாக்குதல் இந்த விமானங்களின் பயன்பாடுகளில் பல திருத்தங்களுக்கு வழிவகுக்கும். உலகில் பல நாடுகள் இந்த விமானங்களை கொள்வனவு செய்ய எடுத்துவரும் முயற்சிகளையும் பாதிக்கும். ஏறத்தாள 20 நாடுகள் அதனை வாங்க திட்டமிட்டிருந்தன. இந்த விமானத்தின் வடிவமைப்புக்கு அமெரிக்க பெருமளவான நிதியை செலவிட்டிருந்தது.

இந்த விமானம் ரடார்களில் இருந்து தப்பும் ஸ்ரெல்த் தொழில்நுட்பம், இலத்திரனியல் சாதனங்களைக் குழப்பும் ஜாமர்கள், ஏவுகணைகளின் ரடார்களால் பின்தொடரப்பட்டால் அவற்றை உடைக்கும் தொழில்நுட்பம் மற்றும் போலியான தந்திரங்களைப் பயன்படுத்தி தப்பும் உத்திகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. ஆனால் அவற்றை எல்லாம் உடைத்த ஈரானின் வலிமை பலரையும் வியக்க வைத்துள்ளது.



விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டதாகவும், விமானி பாதுகாப்பாக உள்ளதாகவும் அமெரிக்காவின் மத்திய கட்டளைமையம் தெரிவித்திருந்தாரும், சவுதி அரேபியாவின் கிழக்கு பகுதியில் அமெரிக்காவின் MH-47G என்ற சினூக் வகை மீட்பு நடைவடிக்கை உலங்குவானூர்தி

வேல்ஸில் இருந்து **அருஸ்**

தொடர்ந்து வட்டமிட்டு தேடுதலை மேற்கொள்வதை பிளைற்ரடார் 24 என்ற நிறுவனம் காண்பித்துள்ளது. அதாவது வீழ்ந்த விமானத்தையும், விமானியையும் அது தேடுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். இந்த விமானம் எவ்வாறு வீழ்த்தப்பட்டது?



ஈரானின் ஆயத உற்பத்தி பிரிவால் மஜித் என்ற இலகுவில் நகர்த்தப்படும் குறுகிய தூர விமான எதிர்ப்பு ஏவுகணை 2021 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இது நீண்ட பரப்பளவை பாதுகாப்பது அல்லாமல் குறிப்பிட்ட பிரதேசத்தை பாதுகாக்கும் வடிவில் வடிவமைக்கப்பட்டது. அதன் தாக்குதல் வீச்சு 700 கி.மீ மற்றும் 6 கி.மீ உயரத்திற்கு தாக்கக்கூடியது.



ரடார் வழிநடத்தல்களுக்கு பதிலாக அகச்சிவப்புக் கதிர்களைப் பயன்படுத்துவது அதன் பவனையின் வீச்சைக் கட்டுப்படுத்தினாலும், அது இந்த ஏவுகணைகளை ரடார் இல்லாமல் செயற்பட வைக்கின்றது. அது அதன் தப்பிப் பிழைக்கும் திறனை அதிகரித்துள்ளது. எப்-35 விமானத்தின் வெப்ப அடையாளத்தை விட அதன் ரடார் குறுக்குவெட்டுப்

**தொடர்ச்சி: பக்கம் 14**

## QR குறியீட்டுக்குள் ... தொடர்ச்சி...

அவர்களின் வேலை நாட்களில் தாக்கம் செலுத்துமாயின் அது நேரடியாக சம்பளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அவ்வாறு ஏற்படுமாயின் அண்மையில் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு அந்த மக்களை சென்று அடைவதில் பாதிப்பு ஏற்படும்.

அதேநேரம் எரிபொருள் இல்லாததால் கொழுந்து சேகரிக்கும் லொறிகள் வராத போது, தொழிலாளர்கள் நீண்ட தூரம் சுமை தூக்கிச் செல்ல வேண்டியுள்ளது. இது அவர்களின் உடல் நலத்தைப் பாதிப்பதோடு, மேலதிக கொழுந்து பறிப்பதற்கான வாய்ப்பையும் குறைக்கிறது. எரிபொருள் தட்டுப்பாட்டால் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது.

ஏற்கனவே குறைந்த சம்பளத்தைப் பெறும் மலையகத் தொழிலாளர்களுக்கு, தற்போதைய சம்ப ளம் அவர்களின் அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. இவ்வாறான சூழலுக்கு மத்தியில் அரசியல் நிகழ்வுகளும் இடம் பெற்று வருகின்றன. அந்த அடிப்படையில் ஜனாதிபதி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணே சன் உள்ளிட்ட தரப்பினருக்கு இடையிலான சந்திப்பு இடம் பெறவுள்ளது. மலையக மக்களின் பிரச்சினைகள் வெறும் பொருளாதாரப் பிரச்சினைகளாக மட்டுமல்லாமல், அரசியல் ரீதியான அழுத்தங்களாகவும் மாறியுள்ளன.

இந்தச் சூழலில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சமீபத்திய தொலைபேசி உரையாடல் முக்கியத்துவம் பெறுகிறது. ஜனாதிபதி தனது அழைப்புகளுக்குப் பதி லளிப்பதில்லை என மனோ கணேசன் பகிரங்கமாகத் தெரிவித்தமை, மலையக மக்களின் கோரிக்கைகள் புறக் கணிக்கப்படுகின்றனவோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது.

இந்த விமர்சனத்தைத் தொடர்ந்து, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அடுத்த வாரம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தூதுக்குழுவைச் சந்திக்க இணங்கியுள்ளார். இதற்கிடையே அவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் உடன் தொலைபேசியிலும் உரையாடியதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, QR முறைமையின் கீழ் தோட்டத் துறைக்கு எரிபொருள் வழங்குவதில் உள்ள நிச்சயமற்ற தன்மை நீக்கப்பட வேண்டும் அல்லது நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், சம்பள அதிகரிப்பு தொடர்பான இழுபறிகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் காணி உரிமை போன்ற விடயங்கள் குறித்தும் விரிவாகப் பேசப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் தோட்டத் துறைக்கு முன்னுரிமை அளிப்பதாகக்கூறினாலும்,அது நடைமுறையில் சாத்தியமாக வேண்டும். தேயிலைத் தொழிற்சாலைகளுக்குத் தேவை யான எரிபொருளைத் தடையின்றி வழங்க விசேட ஒதுக்கீட்டு முறையை சரியான பராமரிப்புடன் உருவாக்க வேண்டும். விசேட ஒதுக்கீட்டு முறை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உருவாகியுள்ள நீண்ட வரிசை அதற்கான சாத்தியம் குறித்த கேள்வியை எழுப்புகிறது.

எனவே சம்பளப் பிரச்சினையில் இடைக்காலத் தீர்வாக எரிபொருள் நிவாரணக் கொடுப்பனவுகளைத் தொழிலாளர்களுக்கு வழங்க நிர்வாகங்களை வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் மலையக அரசியல் தரப்பினால் தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த சூழலில் மனோ கணேசன் தரப்பினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பின் போது சாதகமான தீர்வு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்க வேண்டு மாயின், அதன் முதுகெலும்பாக இருக்கும் பெருந்தோட்டத் துறை பாதுகாக்கப்பட வேண்டும். எரிபொருள் தட்டுப்பாடு என்பது தற்காலிகப் பிரச்சினையாகத் தோன்றினாலும், அது தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திலும் தேசிய வருமானத்தி லும் பாரிய வடுக்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. ஜனாதிபதி மற்றும் மலையகத் தலைமைகளுக்கு இடையிலான எதிர்வரும் சந்திப்பு, வெறும் பேச்சுவார்த்தையாக இன்றி, செயலில் இறங்கும் ஒரு மாற்றமாக அமைய வேண்டும் என்பதே மலையக மக்களின் எதிர்பார்ப்பாகும்.

• • •







## மத்திய கிழக்கு ... தொடர்ச்சி...

கையை எடுத்தோம். இந்நிலையில் 4ஆம் திகதி ஈரான் கப்பலொன்று தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக தகவல் கிடைத்தது. அது எமது கடல் எல்லையில் நடக்கவும் இல்லை. ஆனால் சர்வதேச கடல்சார் சமவாயங்களுக்கு அமைய நாங்கள் குறிப்பிட்ட பகுதியில் இருந்து சடலங்களை மீட்டதுடன், உயிருடனும் பலரை மீட்டோம். மனிதாபிமான ரீதியில் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்தோம்.

பின்னர் மறுநாள் இன்னுமொரு கப்பல் எமது துறைமுகத் தில் அனுமதி கோரப்பட்டது. நடுநிலையை பேணி அந்தக் கப்பலில் இருந்த 206 பேரையும் மனிதாபிமான அடிப்படையில் எமது பொறுப்பில் எடுத்துள்ளோம். கப்பலையும் பொறுப்பில் எடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று தாக்குதலுக்கு உள்ளான கப்பலில் இருந்த சடலங்களை அந்த நாட்டுக்கு அனுப்பி வைக்க வும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எப்போதும் நாங்கள் நீதி, நியாயம் என்பதனை சர்வதேச மேடைகளுக்கு கொண்டு செல்கின்றோம். எமது செயற் பாடுகள், எமது கொள்கைகள் உள்ளிட்ட அனைத்தும் எமது நடுநிலையை பேணியாதாகவே இருக்கும். நாட்டின் கௌர வத்தை பாதுகாக்கும் வகையிலேயே தீர்மானங்களை எடுப் போம்.

இதேவேளை ஐக்கிய குடியரசின் இரண்டு விமானங் களும் 4 மற்றும் 8ஆம் திகதிகளில் எமது விமான நிலையத்தில் தரையிறங்கி இருக்கவே அனுமதி கோரப்பட்டது. அவர் களிடம் கப்பலை தாக்கும் 8 ஏவுகணை கள் விமானத்தில் பொருத்தப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. நாங்கள் ஐக்கிய அமெரிக் காவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை இருப்பதால் யுத்தத்தில் பங்காளியாவதை தடுக்க முடியாது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் யுத்தம் தொடர்பான நடவடிக்கையில் எமது உடன்படிக்கை தொடர்புபட்டது அல்ல. நாங்கள் சர்வதேச கொள்கைகளை பேணியே நடந்துகொள்கின்றோம்.

மத்திய கிழக்கை அடிப்படையாகக் கொண்ட பொரு ளாதார முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் உள்ளன. அதா வது எரிபொருள் மற்றும் எமது நாட்டவர்கள் அங்கு பணியாற்றுகின்றனர். இந்த விடயத்தில் எமக்கு ஏற்படக் கூடிய பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் அவதானம் செலுத்த வேண்டும். நாங்கள் முறையாக திட்டமிட்டு இதில் செயற்படுகின்றோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த நாள் முதல் நீண்ட கால டெண்டர் மூலம் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் வருகையில் பிரச்சினைகள் ஏற்படவில்லை. அவை சிங்கப்பூர் மற்றும் இந்திய நிறு வனங்களின் ஊடாகவே வருகின்றன. ஆனால் மசகு எண்ணெய் வருவதிலேயே தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. டீசல், பெட்ரோல் மற்றும் மசகு எண்ணெய்க்காக மார்ச் 5ஆம் திகதி டெண்டர் விடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் எரிபொருளை கொண்டுவர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எரிபொருள் விநியோகத்திற்கு உள்ள மாற்று வழிகள் அனைத்தையும் முன்னெடுக்கின்றோம்.

இதேவேளை டொலர் பெறுமதி உயர்வடைந்தாலோ உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தாலோ எமது எரிபொருள் விலை அதிகரிக்கலாம். 2022இல் எரி பொருள் விலைகள் அதிகரிப்பதற்கு டொலர் பெறுமதி உயர்ந்தமையே காரணமாகும். 185இல் இருந்த டொலர் பெறுமதி 370 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டது. இதன் போது எரிபொருள் விலையும் பெறுமளவில் அதிகரித்தது. அதேபோன்று சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும் போதும் இங்கு விலைகள் அதிகரிக்கப்படும். நிறுவனங்களுக்கு விலைகளை அதிகரிக்க அனுமதித் துள்ள போதும் பெட்ரோலிய கூட்டுத்தாபத்தின் சட்டத்தின் பிரகாரம் விலைகளை கூட்டுத்தாபனமே தீர்மானிக்கும். இவ்வாறான விலைகளை தீர்மானிக்கும் போது கியூஆர் முறைமை பயனுள்ளதாக இருக்கும். விலை அதிகரிக்கும் என்று வரிசைக்கு செல்லவும் முடியாது. கறுப்பு சந்தை வியாபாரிகளும் உருவாக முடியாது. கறுப்பு சந்தை வியாபாரிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று எரிவாயு விநியோகம் தொடர்பில் அவதானம் செலுத்தும் போது அதற்கான பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை. சந்தையில் சில இடங்களில் எரிவாயு தட்டுப்பாடு இருக்கின்றது. நாங்கள் தனியார் துறையின் 20 வீதத்தையும் நாங்களே விநியோகிக்க வேண்டியுள்ளது. ஆனால் இதில் நெருக்கடி ஏற்படது என்று கருதுகின்றோம்

வலுச் சக்தியை நாங்கள் முறையாக பேணுவதற்கு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தே பய ணிக்கின்றோம். பொருளாதாரம் வீழாத வகையில் அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அமைச் சரவை, விடயங்களுக்கு பொறுப்பான அதிகாரிகள் உள்ளிட்டோர் முறையாக பணியாற்றுகின்றனர். இதில் இணைந்துகொள்ளுங்கள். விநியோக வலையமைப்பில் பிரச்சினை ஏற்படும் நிலைமை உள்ளது. எரிபொருள் விலை அதிகரிக்கும் நிலைமை உள்ளது. ஆனால் இவற்றை சீர் செய்ய தேவையான ஒத்துழைப்பை சகலரிடம் இருந்தும் எதிர்பார்க்கின்றேன் என்றார்.

## வளைகுடா யுத்தமும் ... தொடர்ச்சி...

மோடி மார்ச் மாத தொடக்கத்தில் இஸ்ரேல், ஐக்கிய அரபு அமீரகம், சவுதிஅரேபியா மற்றும் கட்டார் தலைவர்களுடன் தொலைபேசியில்உரையாடி, அமைதி மற்றும் தற்காப்பு குறித்து விவாதித்துள்ளார்.

2026 மேற்கு ஆசியப் போர் இந்தியப் பொருளாதாரத்தின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, ஹார்முஸ் நீரிணை மார்ச் 1 முதல் ஈரானால் முடக்கப்பட்டிருப்பது இந்தியாவின் எரிசக்தி இறக்குமதியில் பெரும் தட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளது.

பொருளாதார ரீதியாக, இந்திய ரூபாய் மதிப்பு அமெரிக்க டொலருக்கு நிகராக 92 ரூபாயைக் கடந்து வரலாற்றுச் சரிவைச் சந்தித்தது. கச்சா எண்ணெய் விலை பேரல் ஒன்றுக்கு 110 முதல் 120 டொலர் வரை உயர்ந்ததால் இறக்குமதிச் செலவு அதிகரித்தது. பங்குச் சந்தையிலிருந்து அந்திய முதலீட்டாளர்கள் சுமார் 3 பில்லியன் டொலர் மதிப்பிலான முதலீடுகளைத் திரும்பப் பெற்றுள்ளனர், மேலும் ரூபாய் மதிப்பைப் பாதுகாக்க இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தனதுவெளிநாட்டுச் செலாவணி கையிருப்பிலிருந்து 12 முதல் 15 பில்லியன் டொலர்களைச் செலவிட வேண்டியிருந்தது. வளைகுடா நாடுகளிலிருந்து 91 சதவீத எல்பிஜி இறக்குமதியைச் சார்ந்திருப்பதால் உள்நாட்டில் எரிவாயுத் தட்டுப்பாடு கடுமையாக நிலவுகிறது.

இந்திய அரசாங்கம் இந்த நெருக்கடியைச் சமாளிக்கப் பலஅவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மார்ச் 8 மற்றும் 9 தேதிகளில் வெளியிடப்பட்ட “எல்பிஜி கட்டுப்பாட்டு ஆணை” மற்றும் “இயற்கை எரிவாயு கட்டுப்பாட்டு ஆணை” ஆகியவை சமையல் எரிவாயுவை வீடுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில்வழங்க உத்தரவிட்டுள்ளன. உரத் தொழிற்சாலைகள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்களுக்கான எரிவாயு விநியோகம் 70% வரை குறைக்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 60 ரூபாய் வரை உயர்த்தப்பட்டாலும், உலகச் சந்தை விலையேற்றத்துடன் ஒப்பிடுகையில் அரசு பெருமளவு மானியத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.

போர் வலயங்களில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க இந்திய அரசு “ஆபரேஷன் சிந்து” (Operation Sindhu) என்ற பெயரில் பிரமாண்டமான மீட்பு நடவடிக்கையைத் தொடங்கியது. சுமார் 67,000 இந்தியர்கள் வளைகுடாப் பகுதியிலிருந்து பத்திரமாக நாடு திரும்பியுள்ளனர்.

இந்த மீட்பு நடவடிக்கையானது வான்வழி மற்றும் நிலவழிப்பாதைகளை உள்ளடக்கியது. ஈரானில் இருந்த இந்திய மாணவர்கள் சாலை மார்க்கமாக ஆர்மீனியாவிற்கு அழைத்துச்செல்லப்பட்டு, அங்கிருந்து சிறப்பு விமானங்கள் மூலம் டெல்லிக்குக் கொண்டு வரப்பட்டனர். இதேபோல், இஸ்ரேலில் இருந்தவர்கள் ஜோர்டான் மற்றும் எகிப்து வழியாக வெளியேற்றப்பட்டனர். ‘ஐஎன்எஸ் ஷிவாலிக்’, ‘நந்தா தேவி’ மற்றும் ‘ஜக் லாட்கி’ ஆகிய கப்பல்கள் இந்தியக் கடற்படையின் உதவியுடன் சுமார் 2 லட்சம் மெட்ரிக் தொன் எரிபொருளை இந்தியத் துறைமுகங்களுக்கு கொண்டு வந்து சேர்த்தன.

மேற்கு ஆசியப் போர் இந்தியாவின் நீண்டகால மூலோபாயத்திட்டங்களுக்குப் பெரும் சவாலாக மாறியுள்ளது. குறிப்பாக, ஈரான் மீதான அமெரிக்கத் தடைகள் மீண்டும் கடுமையாக்கப்பட்டுள்ளதால், சாபஹார் துறைமுகத் திட்டத்திலிருந்து இந்தியா வெளியேறும் சூழல் உருவாகியுள்ளது. இந்திய அரசு 120 மில்லியன் டொலர் நிதிஉறுதிப்பாட்டைப் பூர்த்தி செய்திருந்தாலும், 2026 ஏப்ரல் 26 உடன் அமெரிக்கா வழங்கிய தற்காலிகத் தடை விலக்கு முடிவடைவது இந்தியாவிற்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறம், “இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடம்” (IMEC) திட்டமானது இந்தப் போரினால் தற்காலிகமாகத் தாமதமடைந்தாலும், அதன் அவசியம் தற்போது மேலும் உணரப்பட்டுள்ளது. வளைகுடா மற்றும் இஸ்ரேல் வழியாக அமையும் இந்தப் பாதை, ஹார்முஸ் போன்ற பதற்றமான நீரிணைகளைத் தவிர்க்க உதவும் மாற்றாகப் பார்க்கப்படுகிறது. போர்ச் சூழலிலும் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இந்தியா இடையிலான வர்த்தக ஒருங்கிணைப்புமற்றும் தொழில்நுட்பப் பகிர்வு இத்திட்டத்திற்கான அடித்தளத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

நிகழ்ந்து வருகின்ற நிகழ்வுகள், மேற்கு ஆசியாவின் அரசியல் வரைபடத்தை மாற்றியமைத்துள்ளன. ஈரானின் உயர்மட்டத் தலைமைச் சிதைவு, வளைகுடா நாடுகளின் எரிசக்தி பாதுகாப்பு குறித்த அச்சம் மற்றும் உலகளாவிய எரிசக்தி சந்தையின் நிலையற்ற தன்மை ஆகியவை ஒருநீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்தியா இந்த நெருக்கடியைக் கையாள வேண்டிய நிலையில் உள்ளது.

• • •

## திருகோணமலை துறைமுக ... தொடர்ச்சி...

ஈரான் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த ‘IRIS Dena’ என்ற ஈரானியக் கடற்படைக் கப்பல், இலங்கை காலிக்கு அண்மையில் உள்ள சர்வதேச கடல் பகுதியில் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் நடத்திய டொர்பிடோ தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் குறைந்தது 87 ஈரானிய மாலுமிகள் உயிரிழந்தனர். 32 பேர் மீட்கப்பட்ட நிலையில், மேலும் பலர் காணாமல் போயுள்ளனர்.

அந்த கப்பல் திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளமை தொடர்பாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா அந்தக் கப்பல் இலங்கையின் பொறுப்பில் இருப்பதாக தெரிவித்தார். இந்தப் போரில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் அதனை புரிந்து கொண்டு பொறுப்புடன் செயற்படுவார்கள் என நம்புவதாகவும் அவர் கூறினார். அப்படி இல்லாவிட்டால் சர்வதேச உடன்படிக்கைகளின் அர்த்தமே இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார். எனவே அத்தகைய அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படாது என அரசு நம்புகிறது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கப்பல் மீட்பு நடவடிக்கைக்கு ஈரான் அரசு இலங்கைக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார். இதற்காக ஈரான் அரசாங்கம் இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு கடிதம் அனுப்பி இருந்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

2000 அக்டோபர் 23 ம் திகதி அன்று திருகோணமலை துறைமுகத்தின் மீது கடற்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இலங்கை கடற்படை பாரிய அழிவுகளை எதிர்கொண்டது. மார்பிள் பீச் பகுதியிலிருந்து துறைமுகத்தை நோக்கி கடுமையான மோட்டார் தாக்குதல் நடாத்தப்பட துறைமுகத்திற்குள் உள்நுழைந்த கடற்கரும்புலிகளும் இலங்கை கடற்படைக்கும் கடுமையாகச் சமர் நடந்து பாரிய அழிவுகள் ஏற்படுத்திய வரலாறுகளும் உண்டு.

2022 ஜூலை 13 ம் திகதி பொருளாதார நெருக்கடி மற்றும் மக்களின் கடும் அறகலிய போராட்டங்களுக்கு மத்தியில், அப்போது ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு கொழும்பு நகரில் இருந்து தப்பிச் சென்ற இடம் திருகோணமலை துறைமுகமாகும். அங்கு இருந்து வெளியேறிபின்னர் மாலத்தீவுக்குத் தப்பியோடினார்.

இலங்கை அரசின் பாதுகாப்பு அரணாகவும் திருகோணமலை துறைமுகம் உள்ளது. அங்குள்ள எண்ணெய் குதங்களை சீர் செய்ய வேண்டிய பொறுப்பை தற்போதைய ஈரான்,போர் இலங்கைக்கு ஞாபகப்படுத்தி உள்ளது.

அந்த பழுதடைந்த 84 எண்ணெய் குதங்களை ஏற்கனவே ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் சீராக்கி இருந்தால் அங்கே இலங்கைக்கு பல வருடங்களுக்கு தேவையான எரிபொருட்களை சேமித்து வைத்திருக்கலாம் என்ற உண்மை உணர்தல் காலத்தின் தேவை.

• • •

## அமெரிக்க வான்படை ... தொடர்ச்சி...

பரப்பு குறைப்புக்கள் கணிசமாக அதிகமாக இருப்பதால் அது அகச்சிவப்பு கதிர்களால் வழிநடத்தப்படும் ஏவுகணைகளின் தாக்குதலில் இருந்து தப்ப முடியாத பலவீனத்தை அந்த விமானத்திற்கு கொடுத்திருந்தது.

அகச்சிவப்புக் கதிகர்களின் வழிநடத்தல்களைப் பின்பற்றுவதில் உள்ள மற்றுமொரு நன்மை என்னவெனில் மஜித் போன்ற ஏவுகணைகள் இலக்குகளின் ரடார் எச்சரிக்கை கருவிகளை ஏமாற்றிவிடும். அதேசமயம் அவற்றின் இலத்திரனியல் ஜாமிங் கூட சிறிய விளைவையே ஏற்படுத்தும். இந்த தாக்குதலின் காணொளியை ஈரானின் வான்எதிர்ப்புப் படை வெளியிட்டுள்ளது. அதில் அந்த விமானத்திற்கு எதிராக ஒரே ஒரு ஏவுகணையே ஏவப்பட்டுள்ளது.

இது ஏவுகணையின் பற்றாக்குறையை காட்டுகின்றதா அல்லது அந்த செலுத்தியில் இருந்த ஏனைய ஏவுகணைகள் வேறு இலக்குகளுக்கு பயன்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சியிருந்த ஏவுகணையை ஏவினார்களா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. இந்த ஏவுகணையினால் ஈரான் அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய படையினரின் அதிக விலையுள்ள ஏறத்தாள 24 MQ-9 மற்றும் ஹெரோன் வகை ஆளில்லாத தாக்குதல் விமானங்களை சுட்டு வீழ்த்தியிருந்தது.

ஏவுகணைகளால் நன்கு பாதுகாக்கப்படும் எதிரியின் வான்பரப்பினுள் ஆழஊடுருவி தாக்குதல் களை நடத்தும் நோக்த்துடனே எப்-35 விமானம் வடிவமைக்கப்பட்டிருந்தது. எனவே தான் இந்த நடைவடிக்கையில் அமெரிக்கா எப்-15 மற்றும் எப்-16 போன்ற நான்காம் தலைமுறை விமானங்களை பயன்படுத்தவில்லை. ஆனால் தற்போது இடம்பெற்ற இந்த தாக்குதல் எதிர்வரும் காலங்களில் ஈரானின் கட்டளைத் தளபதிகள் மீதான இந்த விமானங்களின் தாக்குதல்களை கணிசமாக குறைக்கலாம். ஈரான் தனது குறுகிய தூர வான் பாதுகாப்புத் திறன்களை நவீனமயமாக்குவதில் கணிசமான முதலீடுகளைச் செய்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் கசிந்த ரஸ்யாவின் ஆவணங்களின் படி ஈரானின் பாதுகாப்பு அமைச்சகம் 500 9K333 என்ற வெர்பா எனப்படும் தோளில் வைத்து இயக்கப்படும் குறுந்தூர தரையில் இருந்து வானுக்கு ஏவும் ஏவுகணைக செலுத்திகளையும் அதற்கான 2500 9M336 என்ற ஏவுகணைகளையும் 580 மில்லியன் டொலர்களுக்கு கொள்வனவு செய்திருந்தது.

வெர்பா,உலகின் மிகவும் திறன் வாய்ந்த மனிதனால் எடுத்துச் செல்லக்கூடிய வான் பாதுகாப்பு அமைப்பாகப் பரவலாகக் கருதப்படுகிறது. மேலும், இது மூன்று நிறமாலை தேடுகருவியைக் கொண்ட அறியப்பட்ட ஒரே மனிதனால் எடுத்துச் செல்லக்கூடிய அமைப்பாகும். இது நவீன எதிர் நடவடிக்கைகளுக்கு எதிராக ஒரு தரமான மேன்மையை அளிக்கிறது. இவற்றில் புற ஊதா(IR), அண்மை அகச்சிவப்பு மற்றும் நடு அகச்சிவப்பு தேடுகருவிகள் அடங்கும். இந்த விநியோகங்கள்இ ஈரானின் வான்வெளியை குறைந்த உயரங்களில் ஊடுருவுவதற்கு மிகவும் சவாலான ஒன்றாக மாற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

வெர்பா அமைப்பானது, பின்னணி வெப்ப மூலங்கள், ஒளிக்கீற்றுகள் மற்றும் திசைசார் அகச்சிவப்பு எதிர் நடவடிக்கைகள் (DIRCM) ஆகியவற்றிலிருந்து இலக்குகளைப் பிரித்தறியும் உயர் திறனைக் கொண்டிருக்குமாறு வடிவமைக்கப்பட்டது. போர் நடவடிக்கைகள் தொடர்ந்தால், ரஷ்யா இந்த அமைப்புகளை மேலும் வழங்குவதற்கான சாத்தியக்கூறு கணிசமாக உள்ளது, மேலும் அதற்கான பயிற்சிக்கான காலத் தேவைகளும் ஒப்பீட்டளவில் குறைவானதே.

F-35 விமானத்தின் ஒரு முக்கிய குறைபாடு என்னவென்றால், பிளாக்-4 மென்பொருள் மேம்படுத்தல்களை முடிப்பதில் ஏற்பட்ட தாமதங்கள், அவற்றால் வான்-தரை ஏவுகணைகளை ஏவ இயலாத நிலையை ஏற்படுத்தியுள்ளன. இதனால், இலக்குகளைத் தாக்குவதற்கு அவை அவற்றின் அருகில் பறக்க வேண்டியுள்ளது. இது மஜித் மற்றும் வெர்பா போன்ற குறுகிய தூர வான் பாதுகாப்பு அமைப்புகளின் தாக்குதல்களுக்கு அவற்றை மேலும் எளிதில் இலக்காக்குகிறது.

இதனிடையே குவைத்தில் உள்ள அலி அல் சல்லெம் வான்படைத்தளம் மீது ஈரான் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல்களில் குவைத் வான்படையின் 3 ஈயூரோபைற்றர்கள் எனப்படும் போர் விமானங்கள் அழிவடைந்ததுடன், இத்தாலியின் இரண்டு ஈயூரோபைற்றர்கள் சேதமடைந்துள்ளதாக துருக்கியின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

அதேசமயம், அமெரிக்கா இதுவரையில் 3 எப்-15 விமானங்களையும், ஒரு எப்-18 விமானத்தையும், 7 KC-135 எரிபொருள் நிரப்பும் விமானங்களையும் இந்தப் போரில் இழந்துள்ளது. அதாவது வான்படையின் ஒட்டுமொத்த இழப்பு பில்லியன் டொலர்களாக இருக்கும் என கருதப்படுகின்றது. இந்தப் போரின் போக்கைப் பொறுத்தவரையில் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலைத் தாண்டி அது ஈரானின் கைக்குள் சென்றுவிட்டதாகவே தெரிகின்றது.

• • •

## ஐந்து மாதங்களில் ... தொடர்ச்சி...

மற்றும் வழக்கமான ஆயுதங்களைக் கொண்ட பல்வேறு வகையான புதிய, மேம்பட்ட அல்லது பாரம்பரிய ஏவுகணை செலுத்தும் அமைப்புகளை ஆராய்ச்சி செய்து உருவாக்கி வரு கின்றன. அவை நமது தாய்நாட்டைத் தாக்கும் வரம்பிற்குள் கொண்டுவரக்கூடியவை,” என்று அமெரிக்க செனட் உளவுத்துறை குழுவிடம் கபார்ட் கூறினார். “பாகிஸ்தானின் நீண்ட தூர பாலிஸ்டிக் ஏவுகணை மேம்பாட்டில், நமது நாட்டைத் தாக்கும் திறன் கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளும் (ICBMs) இடம்பெறக்கூடும்.”

2035 ஆம் ஆண்டுக்குள் அமெரிக்காவிற்கான அச்சுறுத்தல்கள் கூட்டாக 3,000-க்கும் மேற்பட்ட ஏவுகணைகளிலிருந்து 16,000-க்கும் மேற்பட்ட ஏவுகணைகளாக விரிவடையும் என்று எதிர்பார்ப்பதாக கபார்ட் அக்குழுவிடம் தெரிவித்தார்.

“பாகிஸ்தானிய நிறுவனங்கள் மீது தடைகளை விதித்து, புதிய தொழில்நுட்பங்களைக் கையகப்படுத்துவதைக் கட்டுப்படுத்த முயன்ற பைடன் நிர்வாகத்தின் பகுப்பாய்வின் தொடர்ச்சியாகவே இது உள்ளது,” என்று வாஷிங்டனைச் சேர்ந்த அறிஞர் ஷுஜா நவாஸ் டான் நியூஸ் செய்தி நிறுவனத்திடம் கூறினார். கடந்த சில தசாப்தங்களாக வாஷிங்டன்-இஸ்லாமாபாத் உறவுகள் ஏற்ற இறக்கங்களைக் கண்டுள்ளன. பனிப்போர் காலத்தில் பாகிஸ்தான் அமெரிக்காவின் கூட்டாளியாக இருந்ததுடன், தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பு (SEATO) மற்றும் மத்திய ஒப்பந்த அமைப்பு (CENTO) உள்ளிட்ட வாஷிங்டன் தலைமையிலான பல முயற்சிகளில் இணைந்தது.

2004-ல் அமெரிக்கா, பாகிஸ்தானை நேட்டோ அல்லாத ஒரு முக்கிய கூட்டாளியாக அறிவித்தது. இருப்பினும், ஆப்கானிஸ்தான் தலிபான்களுக்கு இஸ்லாமாபாத் ஆதரவளிப்பதாகவும், போரினால் பாதிக்கப்பட்ட அந்த நாட்டில் 2021 வரை அமெரிக்க நலன்களைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் அது பின்னர் குற்றம் சாட்டியது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், காசாவின் போருக்குப் பிந்தைய புனரமைப்பைக் கண்காணிக்கும் நோக்கம் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் அமைதி வாரியத்தில் இஸ்லாமாபாத் இணைந்தது.

இந்த தெற்காசிய நாடு சீனாவுடன் ஒரு சுமுகமான உறவைப் பேணி வருகிறது, மேலும் ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் பெல்ட் அண்ட் ரோடு முயற்சியிலும் இணைந்துள்ளது. இது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) முழு உறுப்பினராகவும் உள்ளது.

## வல்லரசுகளுக்கு அச்சு ... தொடர்ச்சி...

என்பதை என்னால் நம்ப முடியவில்லை. ஹோர்முஸ் ஜலசந்தியின் மீது ஈரான் A2/AD (அணுகல்-தடுப்பு/பரப்பு-மறுப்பு) திறனைப் பராமரிக்கிறது.

**கேள்வி:**

**ஈரானின் குறுகிய தூர கப்பல்-எதிர்ப்பு ஏவுகணைத் திறன் பெரும்பாலும் அப்படியே உள்ளது என்று குறிப்பிடுகிறது. ட்ரோன்கள், ஏவுகணைகள் மற்றும் அதிவேகப் படகுகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் இந்த வகையான முழுமையான தாக்குதலுக்கு வளைகுடாவில் உள்ள மேற்கத்திய கடற்படை சொத்துக்கள் எவ்வளவு பாதிக்கப்படக்கூடியவை?**

**பதில்:**

பெரிய கப்பல்கள் முற்றிலும் பாதிக்கப்படக் கூடியவை. இது மேற்கத்திய நாடுகளுக்கு மட்டும் பொருந்தாது; உக்ரைன் போரினால் தெளிவாக உணர்த் தப்பட்ட ஒரு யதார்த்தம் என்னவென்றால், தற்போது எந்தவொரு பெரிய கப்பலும், கப்பல் எதிர்ப்பு ஏவுகணை களுடன் (AShMs) இணைக்கப்பட்ட ட்ரோன் கூட்டங்களால் எளிதில் தாக்கப் படக்கூடிய நிலையில் உள்ளது.

இந்தத் தாக்குதல்களின் பெருக்கம், பாதுகாப்பு ஆயுதக் கிடங்குகளை விரைவாகத் தீர்த்துவிடுகிறது. AN/SLQ-32 போன்ற மேம்படுத்தப்பட்ட மின்னணுப் போர் (EW) அமைப்புகள் கூட பகுதி அளவிலான செயல்திறனையே கொண்டுள்ளன; ஏனெனில் அவை இலக்கைத் துல்லியமாகக் குறிவைக்கும் ஜாமிங் முறையைச் சார்ந்திருப்பதால், புவிசார்/அகச்சிவப்பு (EO/IR) தேடுகருவிகள் அல்லது நிகழ்நேர இடைவழி வழிகாட்டுதல் பொருத்தப்பட்ட நவீன ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மீது அவை மிகக் குறைந்த அல்லது எந்தவொரு விளைவையும் ஏற்படுத்துவதில்லை.

இருப்பினும், உண்மையான அச்சுறுத்தல் ஆளில்லா நீருக்கடியில் இயங்கும் வாகனங்களிடமிருந்து (UUVs) வருகிறது. இவற்றைக் கண்டறிவது கடினம், மேலும் இவை கூட்டமாகச் செல்லும்போது, குறிப்பாகக் கடற்கரைக்கு அருகில், அதிக செயல்திறன் மிக்கவையாக இருக்கின்றன.

ஈரானியக் கடற்படையின் ஆயுதக் களஞ்சியம், UUV-களைத் தாண்டி, இந்தத் தொலைவுகளில் நம்பமுடியாத அளவிற்குப் பன்முகத்தன்மை வாய்ந்ததாகவும் கொடியதாகவும் உள்ளது. மேலும், மணிக்கு 360 கி.மீ. வேகத்தை எட்டக்கூடிய சூப்பர்கேவிட்டேட்டிங் டார்பிடோக்களையும் ஈரான் இயக்குகிறது.

**கேள்வி:**

**இறுதியாக, இந்த மோதல் ஒரு தீர்க்கமான இராணுவ முடிவு இல்லாமல் தொடர்ந்தால், உலகளாவிய அதிகார சமநிலைக்கு, குறிப்பாக மத்திய கிழக்கில் சீனாவின் பங்கு மற்றும் அமெரிக்கத் தடுப்பாற்றலின் நம்பகத்தன்மை தொடர்பாக, என்ன நீண்டகால புவிசார் அரசியல் விளைவுகளை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?**

**பதில்:**

தனது முதல் உண்மையான சோதனையைத் தாங்க முடியாமல் தோல்வியடைந்த ஒரு பாதுகாப்பு 'குடையை' விற்க அமெரிக்கா மேற்கொண்ட பல தசாப்த கால முயற்சிகளை இந்தப் போர் நிராகரித்துள்ளது. அதிகார சமநிலையை மாற்றுவதைத் தாண்டி, பல ஆண்டுகளாகத் தடைகளுக்கு உள்ளான ஒரு நாட்டிற்கு எதிரான போரில் அவர்களால் வெற்றி பெற முடியாவிட்டால், 1 டிரில்லியன் டாலர் நிதி ஒதுக்கீடு எவ்வாறு செலவிடப்படுகிறது என்று அமெரிக்கர்களைக் கேள்வி கேட்க இது வழிவகுக்கும்.

உயரமான ட்ரோன்கள் மற்றும் புவி தாழ் சுற்றுப்பாதை (LEO) செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தி இந்த மோதலைக் கண்காணித்து பதிவு செய்வதன் மூலம் கற்றுக்கொள்ள சீனர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. இந்தப் போரில் இதுவே அமெரிக்காவின் பெரும் இழப்பாகும்: அதன் நவீன வான் மற்றும் கடற்படைக் கோட்பாடுகளின் முக்கியப் பகுதிகளை அம்பலப்படுத்தியது, அவை இப்போது முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

சீனர்கள் மேலும் பல நிலைகளைக் கைப்பற்றுவார்கள், ஆனால் ஈரான் மற்றும் வளைகுடா நாடுகளுடனான தங்கள் உறவில் அவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டியிருக்கும். இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் தங்கள் உறவுகளை நீண்ட காலமாகச் சமநிலைப்படுத்தி வரும் ரஷ்யர்களிடமிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

• • •







## செம்மணி மனிதப் ... தொடர்ச்சி...

தமிழ் அரசுக்கட்சித் தலைவர்களுக்கு ஏன் செம்மணி புதைகுழி மறந்து போனது?

நாம் 2024 செப்டம்பரில் அதிகாரத்தைப் பொறுப்பேற்றோம். பாராளுமன்றப் பெரும்பான்மையை நவம்பரில் பெற்றுக்கொண்டோம். அன்றிலிருந்து இன்று வரையிலான இந்த 17 மாதங்களில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை 239 ஆகும். இவ்வளவு பணிகளைச் செய்யும் அரசாங்கத்தின் மீதே தற்போது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

செம்மணி புதைகுழி அமைந்துள்ள தொகுதியிலும் நாம் வெற்றி பெற்றுள்ளோம். அங்கு தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரே உள்ளார். இது தொடர்பான முழுமையான விபரங்களை நாம் அறிவோம். ஆராய்ந்துள்ளோம். இதனை விசாரணை செய்வதற்கு எமக்கு மக்கள் ஆணை உள்ளது.

இது மாத்திரமல்ல, மாத்தளை புதைகுழி குறித்தும் நாம் விசாரணை செய்கிறோம். நீதித்துறை பொறிமுறையின் ஊடாக நீதியை நிலைநாட்டும் போது அதற்கு காலம் எடுக்கும். ஏப்ரல் 20ஆம் திகதி மீண்டும் அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஆரம்பிக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரிக்ஸ் ... தொடர்ச்சி...

இந்த அமைப்பின் பரந்த உறுப்பு நாடுகளான சீனா, இந்தியா, பிரேசில், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா ஆகியவையும் எரிசக்திப் பாதுகாப்பு முதல் வளைகுடா கூட்டாண்மை, வல்லரசு சமநிலைப்படுத்துதல் வரை மாறுபட்ட மூலோபாய முன்னுரிமைகளைக் கொண்டுள்ளன.

நேட்டோவும் ஜி7 கூட்டமைப்பும் ஏன் பிளவுபட்டுள்ளன. பிரிக்ஸைப் போலவே மேற்கத்திய கூட்டமைப்புகளும் ஈரான் விஷயத்தில் ஒன்றுபடவில்லை என்று வெளியுறவுக் கொள்கை பகுப்பாய்வு வலியுறுத்துகிறது. நேட்டோ உறுப்பு நாடுகள், குறிப்பாக அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய நடவடிக்கைகள் தொடர்பாக, ஈடுபாட்டின் அளவு மற்றும் தன்மை குறித்து உடன்படவில்லை.

ஜி7 நாடுகள், தங்களின் மாறுபட்ட பொருளாதார உறவுகள் மற்றும் பிராந்திய முன்னுரிமைகளைப் பிரதிபலிக்கும் வகையில், தடைகள், பதற்றம் அதிகரிக்கும் அபாயங்கள் மற்றும் இராஜதந்திர நிலைப்பாடுகள் ஆகியவற்றில் வேறுபடுகின்றன.

ஈரான் மோதல் ஒவ்வொரு நாட்டையும் அதன் சொந்த தேசிய நலன்களான எரிசக்தி, பிராந்திய கூட்டணிகள், உள்நாட்டு அரசியல் ஆகியவற்றை சீர்தூக்கிப் பார்க்கக் கட்டாயப்படுத்துகிறது. இது கூட்டமைப்பு தழுவிய ஒருமித்த கருத்துக்குப் பதிலாக, பிளவுபட்ட நிலைப்பாடுகளுக்கு வழிவகுக்கிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செயற்கை நுண்ணறிவால் ... தொடர்ச்சி...

சேவை மையங்களில் உள்ள, வாடிக்கையாளர்களை நேரடியாகச் சந்திக்காத பணிகள், குறிப்பாகத் தானியக்கமாக்கப்படக்கூடிய இடைநிலை மற்றும் பின்தள அலுவலகப் பணிகள் மிகவும் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆலோசனைகள் இன்னும் ஆரம்ப கட்டத்தில்தான் உள்ளன என்றும், எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை. இந்தச் செய்தி குறித்து கருத்து தெரிவிக்க HSBC-யின் செய்தித் தொடர்பாளர் மறுத்துவிட்டார்.

2024-ல் தலைமைப் பொறுப்பை ஏற்ற வங்கியின் தலைமைச் செயல் அதிகாரி ஜார்ஜஸ் எல்ஹெடெரி, ஒரு தீவிரமான மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக ஏற்கனவே ஆயிரக்கணக்கான வேலைகளைக் குறைத்துள்ளார். வங்கியானது, திட்டமிடப்பட்ட காலத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே, இந்த ஆண்டின் முதல் பாதியில் 1.5 பில்லியன் டாலர் செலவு சேமிப்பு இலக்கை அடைய எதிர்பார்ப்பதாக சமீபத்தில் அறிவித்தது.

மார்கன் ஸ்டான்லி முதலீட்டு வங்கியின் சமீபத்திய ஆய்வில், கடந்த ஆண்டில் செயற்கை நுண்ணறிவு காரணமாக பிரிட்டிஷ் நிறுவனங்களில் 8% நிகர வேலை இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட முக்கிய பொருளாதார நாடுகளில் மிக உயர்ந்த விகிதமாகும்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்





